# மாணிக்கஜோதி

## மணிவிழா மலர்




**புகழ் பூத்த அதிபர்**

**லயன். விநாயகன் மாணிக்கம்**

B.A(Eco), B.Phil, Dip-in-Ed

SLPS-I, SLEAS-III

வெளியீடு

மணிவிழா மலர்க்குழு

யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

(ஸ்ரான்லிக்கல்லூரி) (நவோதயா பாடசாலை)

2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302.146

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கஜோதி

# மணிவிழா மலர்

புகழ்பூத்த அதிபர்

திரு. விநாயகன் மாணிக்கம்

(உதவிக்கல்விப்பணிப்பாளர், யாழ் வலயம்)

வெளியீடு :

மணிவிழா மலர்க்குழு

யா / கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம்

(ஸ்ரான்லிக்கல்லூரி) (நவோதயா பாடசாலை)

2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞான சம்பந்தர் ஆதின முதல்வர் அவர்களின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாண திருநகரில் பழம் பெருமை வாய்ந்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்குவது யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமாகும். கல்விமான் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களின் அளப்பரிய திருப்பணியினால் உருவாக்கப்பட்ட இவ்வித்தியாலயம் 1928ம் ஆண்டிலிருந்து இயங்கிக் கொண்டிருக் கின்றது. கல்விச் சிந்தனையாளர்கள் பலர் காலத்துக்குக் காலம் இக்கல்லூரியை அலங்கரித்து வந்துள்ளனர். அந்தந்தக் காலங்களிலே அதிபர்களாக இருந்த பெருமக்கள் நிறைந்த பணியை ஆற்றியுள்ளனர் என்பதை கல்லூரி வரலாறு காட்டுகின்றது.

அந்த வகையில் 80 ஆண்டுகளை பூர்த்தி செய்து "அமுதவிழா" கண்டு மகிழும் கல்லூரியில் 17 வருடங்கள் அதிபராக கடமையாற்றி ஓய்வுபெறுகின்ற அதிபர் வி.மாணிக்கம் அவர்கள் சிறந்ததொரு ஆன்மீகப் பற்றுள்ள கல்விமான். எந்நேரமும் புன்முறுவலோடு காட்சி யளிப்பார். பல தடவைகள் அவரது பதவிக்காலத்தில் அவரால் நிறை வேற்றப்பட்ட நிகழ்வுகளுக்கு சென்று ஆசி உரைக்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்திருக்கின்றது.

அப்பொழுதெல்லாம் அதிபர் அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அவர் ஆற்றிவரும் பங்களிப்புக்களை அறியும் வாய்ப்பு கிடைத்தது. கால ஓட்டத்திற்கேற்ப கல்லூரியை வழிநடத்தி ஏற்றம் பெறச் செய்தார். தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ப மாணவர்களை வழிநடத்தினார். கல்லூரி வாழ்விலிருந்து ஓய்வுபெறும் அதிபர் அவர்களுக்கு இன்னும் பல பணிகள் காத்திருக்கின்றது. அப்பணி களையும் அவர் தம் ஓய்வுக் காலத்தில் நிறைவேற்றி மண்ணில் நல்ல வண்ணம் வாழ எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்,**
**இரண்டாம் குரும்கா சந்நிதானம்,**
**திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from Hon. Governor, Northern Province



It is my privilege and honour as Governor Northern Province to issue a message to be published in the magazine felicitating the diamond Jubilee celebration of Mr.Vinayagam Manickam. Principal, J/Canaga ratnam Madhya Maha Vidyalayam. Navalar Road, Jaffna.

A Diamond Jubilee obviously unstinted outstanding service of two and a half decades of service in this instance, in the field of education. Therefore the service of a mathematician would not be required to note the year when Mr.Manickam started his service towards imparting knowledge and education are concerned.

In particular, his teaching service begins on 22 November 1982 as a Graduate Assistant Teacher at Holy Trinity College. Nuwara Eliya, where he was sectional Head and also vice principal. Having been here for about for three and a half years. he then joined Hindu Maha Vidyalayam in kilinochchi on 26 may 1986, and after a short period of almost two years. served as the Senior Assistant teacher at R.C.T.M School, palai.

Mr.Manickam's service as a principal begins from January 1991 at Nallur. at Kasipillai Vidyalayam and then onwards has had commendable service as principal in the Jaffna peninsula at Columbuthurai Vidyalayam followed by being principal of Canagaratnam Madhya Maha Vidyalayam at present. To this date had the distinction of having produced over 30 students who have entered University since 2006.

"Good Wine Needs No Bush" is an off repealed axiom in literary circles and so is the service rendered by this humble educationist who has given of his best to the pupils and students of the Northern Province and Jaffna in Particular.

The people of the Jaffna Peninsula I am Sure. take pride in feliciting a person of the stature of Mr.Vinayagam Manickam and these celebrations is a fitting tribute to such a personality.

My good wishes and may the Gods bless him with prosperity!!

**Major General GA.Chandrasiri**
Governor
Northern Province.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் விநாயகன் மாணிக்கம் அவர்களுக்கொரு வாழ்த்து செய்தி என் மனத்திரையிலிருந்து



"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"

என்ற பொய்யாமொழிப் புலவன் வாக்கிற் கிணங்க கல்வியெனும் அருமருந்தைத் தன்னகத்தே பெற்று கற்றவை சொல்லும் பண்பில் நின்று வையத்து வாழ்வாங்கு வாழப்பிறந்த மாணவச் செல்வங்களை கல்வியெனும் கரையினில் கொண்டு செல்லும் உன்னத சேவையினை உயர்வுடன் செய்யும் விநாயகன் மாணிக்கம் எமக்காக இறைவனளித்த மாணிக்கமாகும். அள்ள அள்ளக் குறையாது பல்கிப் பெருகும் அரிய செல்வமாய் ஒளிரும் கல்விச் செல்வத்தை வாழ்க்கை காலத்தில் சேவையாக வழங்கும் பேறு பெற்றவன் பெரியவன். இவ்வகையில் 22.04.2010 இன்று நல்லதோர் இன்னாளில் மணிவிழாக் காணும் மாணிக்கமும் உயர்ந்து விட்டான் பெரியோனாய் சமூகத்தின் மத்தியிலே. கல்வி கற்பித்தலில் மட்டுமன்றி தன் சேவைக் காலத்தில் கல்விசார் ஏனைய சேவைகளையும் மாணவ சமூகத்திற்கு மட்டுமன்றி மண்ணகத்திற்கு பல ஆண்டுகள் வழங்கி வருகின்றான். உண்மை ஆனால் அவன் செய்த உன்னத சேவை நாளுக்கு நாள் புது மெருகுடன் திகழ்கின்றதென்றால் மறுப்பதற்கில்லை. காலத்தால் அழியாத கடல் கொண்டு போய்விடமுடியாத ஆனால் கடல் போன்ற கல்விச் செல்வமிதை வாரி வழங்கும் சேவைதனைத் தன் பணியாகக் கொண்டு, உயர் தொழில் செய்யும் வள்ளலிவன் பெருமை தன்னை அவனது உன்னத சேவைக்காலம் பறைசாற்றி நிற்கின்றதல்லவா? 1972 முதல் ஓர் எழுதுவினைஞராகத் தன் சேவையை தொடங்கிய மாணிக்கம் தனது சுய முயற்சி கொண்டு பலபடி வளர்ந்து இன்று இந்த உயர்நிலையை அடைந்துள்ளான். அவன் வளர்ச்சி வாழ்ந்து கொண்டிக்கும். வாழப்போகும் இளம் சமூகத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாகவும், முன்னுதாரண மாகவும், அமையும். "காலங்கள் கதி கொண்டு உருண்டோடிப் போனாலும் வாழ்க்கையில் நாமாற்றும் சேவைகள் பல காலத்தால் அழியாதவையே". அவ்வகையில் மாணிக்கம் மண்ணிற்கும், மக்களுக்கும் செய்த சேவையும் காலத்தால் அழியாத ஒன்றாகும்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலர்
தோன்றலிற் தோன்றாமை நன்று.

என்ற பொய்யாமொழிப் புலவன் வாக்கிற்கிணங்க தோன்றிற் புகழொடு வாழ்ந்த இப்பெருமகன் மாணிக்கம் மணிவிழா காணும் இன்நன்னாளில் அவன் சேவையைப் பாராட்டுவதுடன், மென் மேலும் அவனது சேவை விரிவு கொண்டு சமூகத்திற்குப் பலவாறான பயன்தகு செயற்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் துணை புரிய வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

**ஆ. சிவசுவாமி**
**பிரதம செயலாளர், வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் தனது கல்விச்சேவையில் 80 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து அமுதவிழா கொண்டாடியிருக்கின்றது. கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு அமரர் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களால் ஸ்தாபிக்க ப்பட்ட இம் மகா வித்தியாலயம் 1928ஆம் ஆண்டில் இருந்து படிப்படியாக வளர்ச்சி யடைந்து இன்று விசாலமான கட்டத் தொகுதிகளை உள்ளடக்கிய சிறந்த பௌதீக வளங்களுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்மையான ஓர் பாடசாலையாக திகழ்கின்றது.

இவ்வித்தியாலய கல்வி வளர்ச்சிக்காக பல அதிபர்கள் தங்களை அர்ப்பணித்து மாணவர்களின் கல்விவளர்ச்சிக்காக உழைத்திருக்கின்றார்கள் அந்த வரிசையில் 1994ஆம் ஆண்டில் இருந்து வித்தியால யத்தில் அதிபர் பொறுப்புக்களை ஏற்று மிகவும் திறம்பட சேவையாற்றி ஓய்வு பெறும் அதிபர் திரு.வி.மாணிக்கம் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ் வடைகிறேன்.

பதினேழு ஆண்டுகள் அதிபர் பதவியினை அலங்கரித்திருக்கின்றார். அவர் இளைப்பாறினாலும் கூட எதிர்கால கல்வித்துறை சார்ந்த நலன்களுக்கு உழைக்க வேண்டுமென வேண்டி எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.கணேஷ்**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் தனது கல்விச் சேவையில் 80 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து அமுத விழா கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு அமரர் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களால் ஸ்தாபிக்கப் பட்ட இம் மகா வித்தியாலயம் 1928ம் ஆண்டிலிருந்து படிப்படியாக வளர்ச்சி யடைந்து இன்று விசாலமான கட்டடத் தொகுதி விளையாட்டு மைதானம் ஆய்வு கூடவசதி, மாணவர் விடுதி ஆகியவற்றை உள்ளடக்கிய சிறந்த பௌதீக வளங் களுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்மையான வித்தியாலயமாக திகழ்கின்றது.

இவ் உயர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் இவ் வித்தியாலய நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்று அதிபர் பதவிகளை அலங்கரித்த அதிபர்களே காரணமானவர்கள். அந்த வகையில் 1994ம் ஆண்டு முதல் இவ்வித்தியாலயத்தின் அதிபராக விளங்கும் திரு.வி.மாணிக்கம் அவர்கள் எமது கல்வித்துறையில் அளப்பரிய பங்களிப்பினை வழங்கியிருக்கின்றார்.

இவரது காலத்திலேயே வட மாகாணத் துக்கான அரச ஊழியர்களுக்கான ஆங்கில மொழி பயிற்சி நிலையம் ஆளுனர் அவர்களாலே திறந்து வைக்கப்பட்டது.

இத்தகு சிறப்புக்களோடு சிறந்த புலமையும் ஆளுமைத் திறனுமிக்க அதிபர்.வி.மாணிக்கம் அவர்கள் சிறந்த நிர்வாகியாக கல்வி அபிவிருத்தியாளனாக விளங்கியிருக்கின்றார்.

சீரிய கல்வி முன்னேற்ற நட வடிக்கைகளை செவ்வனே நிறைவேற்றி இளைப்பாறுகின்ற திரு.வி.மாணிக்கம் அவர்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

L.இளங்கோவன்
செயலாளர், கல்விபண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணக் கல்விப் பாரம் பரியத்தில் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளில் தனக்கென ஒரு முத்திரை பதித்துக் கொண்ட கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எண்பது ஆண்டுகள் கடந்து அமுத விழா கண்டு மகிழ்கின்றது.

1928ம் ஆண்டில் கல்விமான் கனகரத்தினம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் இன்று சகல வசதிகளையும் உள்ளடக்கிய 1AB பாடசாலையாக உயர்ந்து நிற்பதற்கு கடந்த 80 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அதிபர்களை யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் என்றும் நினைவு கூர்ந்து கொண்டே இருக்கும்.

அந்த வகையில் அதிபர் திரு.மாணிக்கம் அவர்களுக்கும் வித்தியாலய வரலாற்றில் இடமுண்டு. கல்விச் செயற்பாடுகளில் அபிவிருத்தி பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி உழைத்தவர் திரு.மாணிக்கம் அவர்கள்.

1995ம் ஆண்டு முதல் வித்தியாலயம் சொல்லொணா இடர்பாடுகளை சந்தித்தது யாவரும் அறிந்த உண்மை. கல்லூரியின் இடப்பெயர்வு கட்டிடங்கள் ஏனைய வளங்களின் அழிவு மாணவர்களின் இடப்பெயர்வு என்பன வித்தியாலய செயற்பாடுகளில் பெரும் தடைக்கல்லாக அமைந்தது. எனினும் அதிபர் திரு.மாணிக்கம் அவர்களின் விடா முயற்சியால் இத்தனை இடர்பாடுகளிலிருந்து விடுபட்டு வீறுநடை போட்டு நிமிர்ந்தி ருக்கின்றது.

1994.01.29 இலிருந்து இவ்வித்தியாலயத்தில் அதிபர் பதவியினை அலங்கரித்து கல்வித் துறையில் நிறைந்த சேவையாற்றி வருகின்றார். தற்போது தனது கல்விப் பணியையும் சிறந்த நிர்வாகப் பொறுப்பினையும் நிறைத்து இன்று அகவை அறுபதைக் கடந்து மணிவிழாக் காணும் மாண்பினைப் பெற்றிருக்கின்றார். எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்று வெற்றிகரமாக அளப்பரிய பணியாற்றிய அதிபர் திரு.மாணிக்கம் அவர்களை வாழ்த்தி மகிழ்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

வீ.இராசையா
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்தில் புகழ்பூத்த வித்தியாலயங்களில் ஒன்றாக விளங்குவது யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாகும். இவ் வித்தியாலயத்தில் கற்று உயர்ந்தவர்கள் உலகமெங்கும் பரந்து வாழ்கின்றனர்.

இவ் வித்தியாலயத்துக்காக அல்லும் பகலும் உழைத்த அதிபர்களையும் ஆசிரியர்களையும் இந்த எண்பது வருடப் பூர்த்தியில் எண்ணிப்பார்க்கின்றேன். தொடர்ந்தும் அளப்பரிய கல்விப் பணியினை இவ் வித்தியாலயம் ஆற்றி வருகின்றது.

1994ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இவ்வித்தியாலத்தில் அதிபர் பதவியினை அலங்கரித்து வருகின்ற திரு.வி.மாணிக்கம் அவர்களின் காலத்தில் வித்தியாலயம் பன்முகப்பட்ட வளர்ச்சிகளைக் கண்டிருக்கின்றது. மாணவர்களின் நலன் கருதி கற்றல் - கற்பித்தல் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவினைத் தந்திருக்கின்றது. என்றே சொல்லலாம்.

17 வருட காலம் வித்தியாலயத்திற்காக சிறந்த சேவையை வழங்கிய அதிபர் திரு.வி.மாணிக்கம் அவர்களை மனமுவந்து வாழ்த்துகின்றேன். எதிர்காலத்திலும் தம்மாலியன்ற வகையில் கல்வித்துறைக்கு சேவைசெய்ய வேண்டுமெனவும் வேண்டி எல்லா நலன்களுடனும் அதிபர் சிறப்பாக தமது எதிர்காலத்தை அமைத்துவாழ எனது நல்வாழ்த்துக்கள்.

**வே.தி.செல்வரத்தினம்**
**மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணக் கல்விவலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் கல்விமான் அமரர் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களால் 1928ம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது சகல வசதிகளையும் சிறந்த கல்விப் பாரம்பரியத்தையும் உள்ளடக்கிய 1AB பாடசாலையாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வித்தியாலயங்களின் முதல் வித்தியாலயமாக திகழ்கின்றது.

இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவி என்பதில் யானும் பெருமையடைகின்றேன். இவ்வித்தியால யத்தில் கற்று உயர்ந்தவர்கள் கல்விப் பணிப்பாளர்களாக, அரச அதிபர்களாக பல்கலைக்கழக துணை வேந்தர்களாக, வைத்திய கலாநிதிகளாக, பொறியியலாளர்களாக, சட்ட வல்லுனர்களாக உலகமெங்கும் பல பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் கல்லூரித் தாய் தான் பெற்ற பிள்ளைகளின் சிறப்பினால் மாண்புகள் சேர்த்து மகிழ்கின்றாள்.

காலாகாலமாக சிறந்த அதிபர்களையும், தகைமை சான்ற கல்வியாளர்களையும் பெற்று மாணவர்களின் சிறந்த கல்வி வழிகாட்டலுக்கு அளப்பரிய சேவைதனை கல்லூரி ஆற்றி வருவதனை காண முடிகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்விப் பணிப்பாளராக யான் பதவியேற்று வரும் காலத்தில் இவ் வித்தியாலயத்தின் பன்முகப்பட்ட கல்வி அபிவிருத்திப் பணிகளை நன்கு அறிவேன்.

தற்பொழுது அதிபராக கடமையாற்றிய திரு.வி.மாணிக்கம் அவர்களின் சீரிய பங்களிப்பினால் வித்தியாலயம் வளர்ச்சி கண்டிருக்கின்றது. அளப்பரிய இவ் வளர்ச்சிகளுக்கு மூலாதாரமாகவும், ஆணி வேராகவும் விளங்கியவர் அதிபர். வி.மாணிக்கம் என்பதை யாமறிவோம்.

அதிபர் அவர்கள் ஓய்வுபெறும் இச்சந்தர்ப்பத்தில் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அதிபர் அவர்களின் இடைவிடா முயற்சியால் கட்டி எழுப்பிய கல்விப் பாரம்பரியமானது தொடர்ந்து பேணப்பட வேண்டும். எனக் குறிப்பிட்டு மணி விழாக்காணும் அதிபர் அவர்களுக்கு எனது உளம்கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.அ.வேதநாயகம்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



உயர்திரு.வி. மாணிக்கம் அவர்களின் அகவை அறுபது நிறைவை முன்னிட்டு, யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலய சமூகத்தினர் மணிவிழாச் சபையொன்றை நிறுவி அவரது மணிவழா நிகழ்வுகளை பல்வேறு பரிமாணங்களில் ஏற்பாடு செய்துள்ளமை ஒரு மகிழ்வான செய்தியாகும். ஆந்த வகையில் சபையினால் வெளியிடப்படும் மணிவிழா மலருக்கூடாக அவரை வாழ்த்துவதில் பேருவகையடைகிறேன்.

இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் எழுதுநராகத் தனது சேவையை ஆரம்பித்து, பட்டதாரி ஆசிரியராக, அதிபராக உயர்வடைந்து இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டமை இவரது கடின உழைப்புக்குக் கிடைத்த வெற்றியாகும். இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றிய இவர் கடந்த பதினாறு வருட காலமாக இலங்கையின் புகழ்பூத்த இக்கல்லூரியில் ஆற்றிய சேவை மகத்தானது.

தனது மலர்ந்த முகத்தினால் அனைவரையும் வசீகரிக்கும் இவர் தனது ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இக்கல்லூரி மாணவர்கள் கல்வியிலும் ஏனைய இணைப்பாட நிகழ்ச்சிகளிலும் பல்வேறு சிறப்புக்களைப் பெற வழி வகுத்தவர். புழைய மாணவர்களையும் கல்லூரி வளர்ச்சியில் இணைத்துக் கொண்ட இவர் பல பௌதீக வள விருத்திகளையும் மேற்கொண்டுள்ளார். சிறந்த கடவுள் பக்தியுடைய இவர் பல்வேறு சமய சமூக நிறுவனங்களிலும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

இவரது அர்ப்பணிப்பான சேவைக்குப் பல்வேறு அரச உயர் பதவி களை வகுத்த இவரது துணைவியாரும் உறுதுணையாக இருந்துள்ளார். இவர் ஆற்றிய சிறப்பான பணியைக் கருத்திற் கொண்டு மணிவிழா நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ள கல்லூரிச் சமூகத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

இன்று ஓய்வு பெறும் இவர் கடந்த 38 வருட காலமாக அரச சேவையில் ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியவை. ஓய்வு காலத்தில் இவர் நோய்நொடியின்றி நீண்டகாலம் குடும்பத்தினருடன் சந்தோஷமாக வாழ்வதுடன் தொடர்ந்து சமய சமூகப் பணியாற்ற இறையருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

**ப. விக்கினேஸ்வரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்.**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**வலிகாமம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரசபை முதல்வரின் வாழ்த்துச் செய்தி



பத்தாண்டு காலத்திற்கு மேல் எழுதுவினைஞராக கடமையாற்றிய ஒருவர் மதிப்புக்குரிய ஆசிரியராகவும் மிளிர முடியும் என்பதற்கு உதாரண புருஷராக விளங்கிய திரு. விநாயகன் மாணிக்கம் அவர்கள் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்து பதினேழு ஆண்டு காலச் சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வுபெறும் இச் சந்தர்ப்பத்தில் அவரைப் பாராட்டும் சந்தர்ப்பம் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சி யடைகிறேன்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி, தத்துவமாணி பட்டங்களைப் பெற்ற இவர் பழகுவதற்கு இனியவராகவும் பண்பாளராகவும் மாணவர்களது கல்வி வளர்ச்சியில் அக்கறை மிக்கவராகவும் விளங்கினார். 1982ஆம் ஆண்டில் இருந்து கண்ணியம் மிக்க ஆசிரியருடன் நு/ பரிசுத்த திருத்துவக் கல்லூரியில் கடமை யாற்றியமையை நான் பெறும்பேறாகவே கருதுகிறேன். உயர்தர மாணவர்களுக்கு பொருளியற்பாடத்தினை கற்பித்து பல மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியமை பாராட்டாமல் இருக்க முடியாது. இவரிடம் கற்ற மாணவர்கள் இன்று மலையகத்தின் பல பாடசாலைகளில் அதிபர்களாக கடமை புரிகின்றார்கள். ஆறு வருடங்கள் ஒரு குடும்பம் போன்று கல்விப்பணியாற்றி வந்தோம். கல்வித் தொடர்பு உறவுடன் தொலைவில் நாம் மலையகத்தில் கடமை புரிந்த காலங்கள் பொன்னான காலங்களாகும். மலையகத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஒன்றாக இடமாற்றம் பெற்று பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறிக்கான தேர்வில் ஒன்றாக யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றோம் மிக நீண்டகால கல்விப்பாரம் பரியத்தில் அதிபருடன் கொண்டு இருந்த தொடர்புகள் எனது வாழ்க்கையின் எத்தனையோ அனுபவங்களைப் பெற்றுத் தந்துள்ளன.

மலையகத்தில் கடமை புரிகின்ற காலங்களில் இவரது நிர்வாகத்திறமை, பேச்சுத்திறமை என்பனவற்றை இனம் கண்ட பரிசுத்த திருத்துவக்கல்லூரி நிர்வாகத்தின் இடைவெளியை நிரப்பு வதற்காக சில காலம் நிர்வாகக் கடமைகளை பெறுப்பு எடுத்துச் செய்தமையை மலையகமே பாராட்டியது இவரது நிர்வாகத் திறனே இன்று யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தி யாலயத்தை இக்கட்டான சூழ் நிலையிலும் தலைநிமிர வைத்தது. மும்மொழிகளிலும் சரளமாகப் பேசும் ஆற்றல் பெற்ற இவரது நெறிப்படுத்தலில் உருவானர்கள் பலர் இன்று அரசாங்கத்தி னரதும் தனியார் துறைகளிலும் உயர்பதவி வகித்து வருகின்றார்கள் என்பது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய விடையம். மணிவிழாக்காணும் அதிபர் அவர்கர் எல்ல நலன்களையும் பெற்றுவாழ வாழ்த்துகிறேன்.

திருமதி யோ.பற்குணராசா
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



கல்வியே எங்களின் பெருஞ் செல்வம், அதனைக் காத்தும் வளர்த்தும் நிற்கும் கல்வியாளர்கள் எம் போற்றுதற்குரியவர்கள்.

இந்த வகையில் இன்று மணி விழா மங்கலம் காணும் எங்கள் அன்புக்குரிய அதிபர் மாணிக்கம் அவர்களின் வாழ்வும் பணியும் மேன்மை யானது. அவரை வாழ்த்தும் இவ்வேளை பெருமையானது.

கொழும்பு பல்கலைக்கழக மாணவப் பருவத்திலிருந்து மாணிக்கம் அவர்களின் அறிவுத் தேடலை அர்ப்பணிப்பான ஆசிரியத்துவ மேன்மைகளை நயந்திடும் வாய்ப்பு எனக்கானது.

காசிப்பிள்ளை வித்தியாசாலையின் ஆரம்ப கல்வி மேம்பாட்டு பணிகள் தொடங்கி கனகரத்தினம் மகாவித்தியாலய கனிஷ்ட உயர்நிலை கல்விச் சாதனைகள் வரை அதிபர் மாணிக்கம் அவர்களின் பணிச்சிறப்பு மேலானது.

அவரது அனைத்து மேன்மைகளினதும் அடிப்படையாக அமைந்தது ஆரவார மில்லாத, யாருக்கும் தீங்கில்லாத அவரின் மனிதம் என்றால் மிகையில்லை. மனிதருள் மாணிக்கம் மணி விழா மங்கலம் நிறைந்து பொலிந்திட எல்லையிலா என் அன்பு வாழ்த்துக்கள்

**பேராசிரியர் நா. சண்முகலிங்கன்**
**துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாட் பேராசிரியரின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தியாலய அதிபர் திரு.வி.மாணிக்கத்தின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அவர் வேலணைக் கிராமத்தைச் சேர்ந்தவர். சிறுவயதிலிருந்தே எனக்கு அவரைத் தெரியும். எனது தாயார் திருமதி. நாகரத்தினம் பொன்னுத்துரையிடம் சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். சிறுவயதில் அவரின் கல்வி ஈடுபாட்டையும் வகுப்புத்திறமையையும் பற்றி எனது தாயார் குறிப்பிடுவதுண்டு. அவர் கல்வியில் உயர்நிலை அடைவார் என்ற நம்பிக்கையை எனது தாயார் கொண்டிருந்தார். வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்த பின், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் தனது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த திரு.மாணிக்கம், பட்டப்பின் டிப்ளோமா தகைமையையும் பெற்றார். தொழில் நிலையில் அதிபர் சேவைப் பரீட்சையிலும் கல்வி நிர்வாகப் பரீட்சையிலும் சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1996ஆம் ஆண்டு மீள்குடி யேற்றத்தின் பின் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் புனர்வாழ்வு, மீள் செயற்பாட்டிற்கு அதிபர் மாணிக்கம் ஆற்றிய பணி கல்லூரி வரலாற்றில் முக்கிய இடம் பெறும்.

திரு.மாணிக்கம் மாணவர்களால் நேசிக்கப்பட்ட அதிபராவர். மாணவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டவர். தனது ஆசிரியர்களின் திறமையை மதித்துப் பாராட்டுவதுடன் அவர்களின் பிரச்சினைகளையும் விளங்கி அதற்கேற்ப செயற்படுபவராகவும் திகழ்ந்தார். மனித நேயக் கல்வி நிர்வாகத்தை முன்னெடுத்து கற்பித்தற் செயற்பாடுகளைச் சிறப்புற முகாமை செய்வது பாராட்டு க்குரியது.

ஆசிரியர்களிடையே ஒற்றுமையை வளர்த்து, இணைந்த செயற்பாடுகள் மூலம் பாடசாலைச் சமூகத்தை உற்சாகமாகவும், துடிப்பாகவும், வைத்திருப்பதில் வெற்றி கண்ட அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடனும், பழைய மாணவர் சங்கத்துடனும், பாடசாலை அயலுடனும் நல்லுறவைப் பேணி, பாடசாலையின் வளர்ச்சியை முன்னெடுத்த பெருமைக் குரியவராவர்.

வயது அடிப்படையில் அதிபர் சேவையை நிறைவு செய்யும் திரு.மாணிக்கம் தொடர்ந்தும் வேறு ஆக்கப்பபணிகளில் ஈடுபட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அவர் இன்னும் நீண்ட காலம் சுகமான, ஆக்க பூர்வமான, நிறைவான வாழ்வைப் பெற இறைவன் அருள் புரிவாராக.

**வாழ்நாட் பேராசிரியர்**
**பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**(Ph.D-Durhan)**
**முன்னாள் துணைவேந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையால் உயர்ந்த மாமனிதர்



கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர்.திரு.வி.மாணிக்கம் அவர்களின் மணி விழாவை முன்னிட்டு பாடசாலைச் சமூகம் மலர் ஒன்றினை வெளி யிட்டு வாழ்த்தினையும் ஆசியினையும் பாராட்டினையும் தெரிவிப்பதையிட்டு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் நிறைவான சந்தோச மடைகின்றேன்.

உயர்வான கல்வியறிவு ஆற்றலுடன் ஆங்கிலம், சிங்களம், போன்ற மொழிகளை நிர்வாகத் தேவைகளுக்காக பயன்படுத்தக் கூடிய சிறப்பார்ந்த ஆற்றலைத் தன்ன கத்தே கொண்டபோதும் தற்பெரு மையற்ற தன்னடக்கமான மனிதனாகப் பழகும் ஆற்றலே அவரின் இன்றைய உயர்வுக்குக் காரணம் எனலாம்.

இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் பல்வேறு தரப்பினரையும் நிர்வகித்த அனுபவம் அவரது சொல்லிலும், செயலிலும் இன்றும் காணப்படுவது மறக்க முடியாத நற்குணங்களாகும். இலங்கையின் கல்விப் புலம் சார்ந்த மலர், விதம் விதமான பாடசாலைகளுக்காகவும், பதவிக்காகவும் முண்டியடித்துக் கொண்டு வார் ஓட்டம் ஓடும் இந்தக் காலத்தில் தன்னைத் தேடிவந்த பதவிகளைக் கூட தேடி ஓடாது, தான் எடுத்த வேலைத்திட்டங்களை சிறப்புற ஆற்ற வேண்டும் என்ற மனத்திடத்துடன் உழைக்கும் ஒரு மனிதராகவே இன்றும் விளங்குவது மறக்க முடியாததாகும்.

இப்பாடசாலையின் வரலாற்றில் எத்தனையோ அதிபர்கள் மணி விழாக்கண்டிருக்கின்றார்கள். இனிவரும் காலத்திலும் காண்பார்கள். ஆனால் பாடசாலையில் அதிபர் சேவையில் இருக்கும் ஒருவர் கல்வி நிர்வாக சேவைச் சேர்ந்தவராக இருந்து சேவை செய்த தலைமகன் என்ற பெருமையை பெறுபவர் எனது அன்புக்குரிய அதிபர் மாணிக்கம் ஒருவராகத்தான் இருப்பார் என என்மனம் எண்ணுகின்றது.

வயது அடிப்படையில் அதிபர் சேவையை நிறைவு செய்யும் திரு.மாணிக்கம் தொடர்ந்தும் வேறு ஆக்கப்பபணிகளில் ஈடுபட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

அவர் இன்னும் நீண்ட காலம் சுகமான, ஆக்க பூர்வமான, நிறைவான வாழ்வைப் பெற இறைவன் அருள் புரிவாராக.

**திரு. சி. மாணிக்கராஜா**
**கோட்டக்கல்விப்பணிப்பாளர்,**
**நல்லூர் கோட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம்



யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றில் பெரும் புகழும் பூத்த மத்திய மகாவித்தியாலயங்களில் ஒன்றாகத் திகழும் கல்விமான் கனகரத்தினம் அவர்களால் உருவாக்கப்பட்ட யாழ் கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம் அதன் வளர்ச்சிக்கும் நிறைவுக்கும் உழைத்த பல அதிபர்களை கடந்த 82 ஆண்டுகளில் கண்டுள்ளது. அவர்களில் கடந்த 17 வருடங்களாக அதிபர் கதிரையை அலங்கரித்து பாடசாலைக்கு நற்பணியாற்றிய எமது அதிபர் மதிப்புக்குரிய திரு.வி. மாணிக்கம் அவர்கள் தன் உயர்ந்த சேவையை நிறைவு செய்து ஓய்வு பெறும் இவ்வேளையில் அவர்தம் சேவை நலன் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கடந்த நூற்றாண்டின் எண்பதுகளிலிருந்து இன்றுவரை போரின் கொடுமையால் பாதிப்புற்றிருந்த யாழ் மாவட்ட பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் வெற்றிகரமாக நடாத்திய அதிபர்கள் ஒரு சிலரே. அவர்களில் ஒருவர்தான் எமது அதிபர் ஆவார். அவர் இப்பாடசாலையை பொறுப்பேற்று சிறிது காலத்தின் பின்னர் 1995 காலப்பகுதியில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன்போது பாடசாலையில் உள்ள மிக முக்கிய ஆவணங்களான பரீட்சைப் பெறுபேறுகள், சம்பவதிரட்டுப் புத்தகங்கள், பொருட் பதிவேட்டுப் புத்தகங்கள், போன்றவற்றை இடத்துக்கிடம் கொண்டு சென்று கட்டிக் காத்து பாதுகாத்து பாடசாலை வளங்களில் அவர் கொண்ட மேலான அக்கறையை மேலும் எடுத்துக் காட்டுகின்றது.

சிறந்த நிர்வாகிக்குரிய திறமையும் யாரையும் கவர்ந்திழுக்கும் பேச்சாற்றலும் உயர்ந்த பண்பும் கொண்டவராக விளங்கிய எமது அதிபர் அவர்கள் சைவசமய ஒழுக்கவிழுமியங்களை மாணவர்பாற் கொண்டு செல்வதற்கும் அதன்மூலம் ஓர் ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் ஆவார். பாடசாலை என்ற கட்டமைப்பு வித்தைகள் பலவற்றைக் கற்பிக்கும் ஓர் ஆலயம் என்பதைக் கருத்திற் கொண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் உட்பட இணைப்பாட விதானச் செயற்பாடுகளும் மிக நேர்த்தியாக அமைய வேண்டும் என்னும் விருப்பம் கொண்டு செயல்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு எடுத்துக் காட்டாக அண்மைக்காலத்தில் எமக்கு கிடைத்த பரீட்சைப் பெறுபேறுகளும் பல்கலைக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதியும் சான்றாகும். அத்துடன் எமது பாடசாலை மன்றங்களால் நடாத்தப்படும் தமிழ்த்தினவிழா, உயர்தர மாணவர் ஒன்றுகூடல் வைபவம், ஆங்கில தினம், ஒளிவிழா, நவராத்திரி விழா, பரிசளிப்பு விழா, இல்லவிளையாட்டுப் போட்டி போன்றவற்றை வருடாந்தம் நடாத்தி மாணவர்களை சமூக இசைவாக்கம் பெறச் செய்வதற்காக ஊக்குவித்து செயற்பட வைத்த அதிபரின் ஆளுமை போற்றுதற்குரியதாகும். அத்துடன் விளையாட்டுத்துறையில் நீண்டகாலத்தின் பின்னர் தேசிய மட்டத்திலும் மாகாணமட்டத்திலும் எமது மாணவர்கள் பங்கு பற்றி வெற்றியீட்டியமை அவர் விளையாட்டுத் துறையிலும் கொண்ட ஆர்வத்தை எடுத்துக் காட்டுகின்றது.

எமது பாடசாலை ஒரு 1AB பாடசாலையாக இருந்த போதிலும் வர்த்தக கல்விக்கு பெயர்போன பாடசாலையாக நீண்டகாலம் இருந்து வருகின்றது. அவ்வாறு இருந்தும் இங்குள்ள பல தேசியப் பாடசாலைகளுக்கு இணையாக விஞ்ஞானக் கல்வித்துறையை உயர்தர வகுப்புக்களில் தொடர்ந்தும் பேணிக் காத்து அதனை வளர்ச்சியடையச் செய்தமை கடந்த 22 வருடங்களின் பின்னர் எமது பாடசாலையிலிருந்து கடந்த வருடம் ஒரு மாணவர் பொறியியல்துறைக்கும் இரு மாணவர்கள் சித்த மருத்துவ துறைக்கும் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழகம் சென்றமை அவர் விஞ்ஞான கல்விமேல் கொண்டிருந்த அக்கறையை மேலும் எடுத்துக் காட்டுகின்றது.

இவரது காலத்தில் வெளியிடப்பட்ட பவள விழா மலரான கனகஜோதி, அமுதவிழா, மலரான அமுதஜோதி என்பன அவரது ஆளுமை வளர்ச்சிக்கும் தலைமைத்துவ ஆற்றலுக்கும் சிறந்த நிர்வாகத் திறனுக்கும் சிகரம் வைத்தாற் போல அமைந்திருந்தன. என்று கூறுவதில் பெருமகிழ்வடைவதோடு எமது அதிபர் எதனையும் நேரடியாகக் கூறிவிடும் இயல்புடையவர். எமது பிழைகளை, தவறுகளை உடனடியாக எடுத்துக்காட்டி அவற்றை சரியாக வழிநடத்துவதில் மிக கண்டிப்பாகவும் கவனமாகவும் நடந்து கொள்வார். இது அவரிற்கே உரிய தனிப்பண்பாகும்.

எமது அதிபர் அவர்களுக்கும் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் யாழ் இந்துக் கல்லூரி, வவுனியா, மகா வித்தியாலயம் என்ற தேசி பாடசாலைகளுக்கு அதிபராக செல்வதற் குரிய வாய்ப்புக்கள் இருந்த போதிலும் அதற்காக அவருக்கு அரசியல் தலைவர்கள் உட்பட பல்வேறு தரப்புக்க ளிடமிருந்தும் அழைப்பு வந்த போதிலும் அவற்றையெல்லாம் புறம் தள்ளிவிட்டு இப்பாடசாலையிலேயே தொடர்ந்தும் சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணத் தோடு இருந்தமையும் எமது கல்வி வலயத்தில் கோட்டக்கல்வி அதிகாரியாக, செல்லக்கூடிய வாய்ப்பு இருந்தபோதிலும் அவ்வாய்ப்புக்களையும் பயன்படுத்தாது இருந்து வந்தமையும் அத்துடன் எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல கடந்த வருடம் அவருக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையில் கிடைத்த பதவி உயர்வை பயன்படுத்தி வேறு உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிகளுக்கு செல்லாது இப்பாடசாலை யிலேயே தனது சேவைக்காலத்தை நிறைவு செய்தது இப்பாடசாலையில் அவர் கொண்ட மேலான அக்கறையை எமக்கு எடுத்துக் காட்டி நிற்கின்றது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் பல முன்னணிப் பாடசாலைகள் மாணவர்க ளிடமிருந்து பெரும் தொகையான பணத்தை அறவிட்டுக் கொண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு மட்டும் பாடசாலையில் சேருவதற்கு அனுமதி கொடுக்கின்ற வேளையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத ஏழைப் பெற்றோர்களின் மாணவர்களுக்கு இப்பாடசாயில் கல்வி கற்பதற்கு வாய்ப்புக் கொடுத்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றமை அவர் பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் மேல் கொண்டுள்ள அக் கறையை மேலும் எடுத்துக் காட்டுகின்றது.

கல்வி உலகில் சிறந்த முகாமைத்துவ திறனும் துணிச்சல் மிக்கவருமான ஒரு தலைவர் பாடசாலை கல்விச் செயற்பாடுகளிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்வது எம் பாடசாலை சமூகம் எதிர்நோக்கும் பாரிய இழப்பாகும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றபோதிலும் அவரிடம் நாம் பெற்ற ஆழமான அனுபவங்கள் எம்மை நெறிப்படுத்தி வழிநடத்தும் என்று கூறுவதுடன் எமது பாடசாலைக்காக அயராது உழைத்து தனது அறுபதாவது அகவையில் தடம்பதிக்கும் எம் அதிபர் அவர்களின் உயர்ந்த சேவையை பாராட்டுவதோடு அவரின் வாழ்வும் பணியும் தொடர்ந்து சிறக்க இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

திரு.செ.உதயகுமார்
பிரதி அதிபர்
யாழ் கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கஜோதி மலராசிரியர் மனத்தில் நிறைந்தவை



## "மாணிக்கஜோதியான மாணிக்கம்"

வேலணையூர் விநாயகன் அன்னப்பிள்ளைக்கு
வியனுலகிற்கு ஏற்ற புத்திரராய் பிறந்தார்
ஆண்கள் ஐவருடன் பெண்கள் இருவரோடும்
அவனியிது மகிழ்ந்திட மாணிக்கமாய் திகழ்ந்தார்
சின்னப் பருவம் முதல் பெற்றோர்க்கு
செல்லப் பிள்ளைஎன விளங்கினார்
எண்ணிய எண்ணியாங்கு ... என்பதற்கு இணங்க
எடுத்த பணிகளை நிறைவேற்றி வெற்றியும் கண்டார்
பள்ளிப்பருவம் அது பாங்குற நெருங்கிடவே
கல்வி யளிக்க வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இணைத்தனர்
எல்லோரின் விருப்புக்குரிய மாணவனாய்த் திகழ்ந்ததால்
இடைநிலைக் கல்வியை வேலணை மத்தியில் பெற்றார்
பல்லறிவுக் கலைகளைப் பெற்றே உயரும் வேளையில்
பாங்குடன் உயர்தரக் கல்விக்காய் யாழ் இந்துவில் இணைந்தார்
அல்லும் பகலும் ஆவலாய் கல்வியைத் தொடர்ந்ததினால்
கொழும்பு பல்கலைக்கழகத்தில் புகுந்து கொண்டார்
கலைமாணி, தத்துவமாணி எனப் பட்டங்களால்
கல்விஉயர்வினை அலங்கரித்துக் கொண்டார்
இலங்கை அரச எழுதுவினையர் சேவையில் பத்து ஆண்டுகள்
எழுபத்தி இரண்டு முதல் எண்பத்து இரண்டுவரை பணியும்மாற்றினார்
ஆட்பதிவுத் திணைக்களம் யாழ்.மட்டு நகர் செயலகங்களிலும்
அளப்பரிய சேவையாளனாய் விளங்கினார்
நுவரேலியா, கிளிநொச்சி புலோப்பளை யாழ்ப்பாணத்தில்
ஆசிரியர் பதவிகளை அலங்கரித்து பெருமையும் சேர்த்தார்
மணப் பருவம் நெருங்கிடப் பெற்றோர் இவருக்கு
மணநாள் குறித்து சிறி ரஞ்சிதமலரைத் துணையாக்கினார்
குணப்பண்பு மிக்க சிறி ரஞ்சிதமலர் இல்லத்தரசியானார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாகம் பிரதேச சபையின் செயலாளர் ஆகப் பணியும் ஆற்றினார்
இல்லறத்தின் பயனாய் இருவரும் புத்தரிர் நால்வரைப் பெற்றனர்.
செந்தூரன், சுகன்யா, சைலேந்திரா, லாவண்யா புத்திரராகினர்
இந்த உலகினைப் பிரிந்து செந்தூரன் லாவண்யா அமரராகினர்.
மக்கள் வங்கி அலுவலராய் சுகன்யாவும் பணிகளேற்றார்
கணனி மென்பொருள் பொறியியலாளராக சைலேந்திரா லண்டனில்
தந்தை வழி நின்ற மைந்தரும் மாண்புகள் சேர்த்தனர்
சுகன்யாவுக்கும் ராஜ்பவனை மணாளராக ஏற்றே மகிழ்ந்தனர்
பேத்தி ரட்சண்யாவுடன் குடும்பம் குதுகல வாழ்வுடன் மகிழ்கிறது.
காசிப்பிள்ளை வித்தியாலயம் கொழும்புத்துறை வித்தியாலயத்திலும்
கண்ணியத்துடன் அதிபராக கடமையேற்று சிறப்பித்தார்
ஆன்மிகப் பற்றுடன் ஆலயப் பணிகளை நிறைவேற்றினார்
சைவபரிபாலன சபையிலும் அரிமாக்கழகத்திலும் இணைந்தார்
பரீட்சைப்பகுதிகள் பலவற்றில் விருப்புடன் பணிகள் ஆற்றினார்
1928இல் ஆறுமுகம் கனகரத்தினம் எனும் கல்வியாளன்
தீரமுடன் தேசத்துக்கு உவந்தளித்த கல்லூரியாம்
திருவளர் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில்
பதனேழு ஆண்டுகளும் பயன்மிகு சேவைபுரிந்தார்.
கல்வி அபிவிருத்திப் பணிகளை பெருக்கிக் கொண்டார்
ஆயிரத்துத் தொளாயிரத்து தொன்னூற்று நாலிலே
அதிபர் பதவிதனை அலங்கரிக்க இடம் பிடித்துக் கொண்டார்
இராமலிங்கம் அதிபர் வரிசையில் கல்விப்பணிகளை
புதுமைக்கோலத்தோடு "ஸ்ரான்லியில்" கரம் பற்றினார்
யாழ்ப்பாண கல்வி கலாசார பாரம்பரிய பெருமைகளுக்கு
வாழ்வாதாரமாக இடம் அமைத்தது எமது வித்தியாலயம்
பிரதேச மாணவரின் கல்வி நலனுக்காய் பிரியமுடன் உழைத்தார்
அறிஞர்கள், கலைஞர்கள் கல்வி மான்கள் பணிப்பாளர்கள்
பொறியியளாளர்கள் கணக்காளர்கள் அரச அலுவலர் என
பலரை உருவாக்கிய வித்தியாலயத்தில்
முதல்வர் மாணிக்கம் அவர்கள் ஆற்றிய பணிகள் ஆயிரம்
"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடு அல்ல மற்றயவை" குறள் நெறிக்கு ஏற்ப
கல்விச்சேவைதனை காலம் முழுவதும் கண்எனக்காத்தார்
"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பதற்கு அமைய
எங்கள் சிறார்களுக்கு எழுத்தறிவிக்கும் பணிதனை ஏற்றார்
தொன்னூற்றைந்தில் நடந்த இடப்பெயர்விலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்புடன் பணிகளாற்றி தென்மராட்சியிலும் கல்விக்காய் உழைத்தார்
அன்னவர் எங்கள் அதிபர் ஆற்றிய சேவை போற்றுதற்குரியது
விசாலமான கட்டிடத் தொகுதி எழிலுடன் விஞ்சி நிற்கிறது
ஆங்கிலத்துறைக்கோர் பயிற்சி மையம் அமைக்கப்பட்டது
பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் எண்ணிக்கை ஏற்றம் கண்டது
பொறியியல் கலை வர்த்தகம் சித்தமருத்துவத் துறைகளுக்கும்
எங்கள் அதிபரின் காலத்தில் இடம் கிடைத்தது
கற்றல் - கற்பித்தலில் உயர்ச்சிகாலும் நோக்கில்
காலம் முழுவதும் கடமையுணர்வுடன் உழைத்தவர்
ஆசிரியரை பேசும் சுபாவம் எங்கள் அதிபரிடம் உண்டு தான்
அன்புரிமையான கண்டிப்புத்தான் அது
நேசம் காட்டி பழகும் இயல்பு கொண்டவர்
இன்பம் சூழ்ந்தது என்றால் எங்கள் அதிபர் காலத்தில் தான்
நண்பராகப் பழகுவார் நம் வருகை பிந்தினால் சிவப்புக்கோடுதான்
கல்வி வளர்ச்சி மேல் வைத்த கருணைதான் அது
எண்பது ஆண்டுகள் நிறைத்து நிமிர்ந்த எங்கள் கல்லூரியில்
அன்பாலும் அறிவாலும் ஆசிரியரை
மாணவரை ஊழியரை நேசித்த செம்மல்
மணிவிழா நயகன் மாணிக்கம் காலத்தில் வித்தியாலயத்தில்
பவளவிழா கனகஜோதி அமுதவிழா அமுதஜோதி மலர்கள்
மணம்பரப்பி மகிமை சேர்த்து மாண்பு பெருக்கினர்
இன்று எம்மிடத்தில் மாணிக்க ஜோதி
மாணிக்க வீணையாக மங்கல நாதமாக ஒலிக்கிறது
இன்றும் மகிழ்ச்சியான செய்தி ஒன்று
மணிவிழா நாயகனை மற்றோர் பதவி ஒன்று அலங்கரிக்கிறது
உதவிக்கல்விப்பணிப்பாளராக எங்கள் அரண்மனை இவரை அழைக்கிறது
எங்கள் அதிபர் மாணிக்கம் அவர்களின் மகிமை சொன்னோம்
இனியென்ன விடைகொடுக்கும் நேரம்
பரந்த எம் தேசம் எங்கும் பணிகள் பலஆற்றி
சிறந்து வாழ செம்மை நலத்துடன் எம் வாழ்த்துக்களை
இறையாசி வேண்டி இன்பமே சூழ வழங்குகின்றோம்

"மாணிக்கஜோதி மலராசிரியர்"

கவிமாமணி கவியரசு மகாகவி சாகரம், செஞ்சொல்ஞானவாரிதி
வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை. எம்.பி அருளானந்தன் J.P
(வானொலி,தொலைக்காட்சி நேர்முகவர்ணனையாளர்)
ஆசிரியர், யா/ கனகரத்தினம மத்திய மகாவித்தியலாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Manickam is an Era



Mr. Vinayagan Manickam assumed duties as the principal of J/ Canagaratnam M.M.V in 1994. Before this appointment, he served as the Management assistant, assistant graduate teacher, Sectional head, Deputy Principal and Principal at many government institutions all over the Island.

Mr.Manickam is a skilled administrator in the field of education. His administrative abilities were proved beyond doubt during his tenure as the Principal of his past schools.

Mr. Manickam is a member of the last batch of administrators in the Sri Lanka Education Administrative Service grade III, selected by a seniority, merit and examination basis. It is worthy of mention that only some SLPS -I were selected from the whole country for this service.

Mr. Manickam who through his dedication, commitment and untiring work succeeded to develop our school which was heavily damaged by the Inland war.

Since 1994, as the Principal of Stanley College, he was able to improve standards of academic performances, sports and infrastructure of the College. Some of the noteworthy achievements are as follows.

* Escalating performances at Ordinary Level and Advanced Level Examinations.
* Completion of the play ground parapet.
* A new two storey building consisting of 15 classrooms.
* Modern Computer learning Centre with facilities to learn information techno logy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* The opening of the STEPS institute.
* Constructing the front parapet of the School.
* Building the two storey science Laboratory.
* Development under JICA project.
* Involving the navothaya project.
* Constructing the toilet complex.
* Reconstruction of the boys' & girls' hostel
* Promoting to form the OSA Colombo branch

In addition he is the man to support the relationship bridge of north and south after 2002and after 2009.

He has good relationship of the higher officials of 3 forces and police officials, in escalating the social harmony among the communities in Sri Lanka.

On behalf of the school society, we congratulate for his promotion as the Assistant Director of Education, Jaffna Zone From 21.04.2010.

**P.N.Shutharson** DETE (Merit),
Dip-In-English (OUSL), Dyn-Ed-Trd(U.S.A),
Spl-Trd-English(Cey), WSPS (Merit)
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்க பேராசானுக்கு மகிழ்ந்தளித்த மாண்புறு பாமாலை



தாயென அன்பு செய்வாய்
தந்தை போல் உதவி நிற்பாய்
சேயென மாணவர் தமக்கு
செவ்விய அறிவு தந்தாய்
தூய நன் நடத்தையாளே
துணையென பெற்றோர் போற்ற
ஆய நற் குணங்கள் கொண்ட
ஆதவா! சென்று வாராய்

ஊதியம் வேண்டி நீயும்
உழைப்பினை நல்கிடாது
பூதலத்து கல்வி யோங்க
பொழுதெலாம் உழைத்து நின்றாய்
ஆதலால் ஆசானாக்கு எல்லாம்
அணியென நீ திகழ்ந்தாய்
காதலால் உனைப்பிரிய இந்த
கல்லூரி கண்ணீர் வடிக்கின்றாளே!

மாணவர் உனை நினைக்கும் போது
மகிழ்தரும் வடிவமானாய்
ஆணவம் பெருமை அந்த
ஆசானுக்கு உவமையானாய்
காணும் போது நெஞ்சையள்ளும்
கருத்தினருக்கு உவமை நீயே
நாணுறாள் எம் கல்லூரித்தாயாள்
நின் நடத்தையை மெச்சியன்றோ?

தப்பதும் தவறதும் செய்தால்
தடிகொண்டு தாக்க மாட்டாய்
ஒப்புறவாகப் பேசி
உள்ளத்தைக் கொள்ளை கொள்வாய்
நட்பதால் தோழன் போல
நடத்துவாய் சக ஆசான் மாரை
இப்படிப்புகழ் படைத்தே உன்னை
எப்படி நாம் உன்னை மறப்போம் ஐயா

எண்ணரும் கீர்த்தி மேன்மை
எய்தினார் மாணவர்கள் என்றால்
தன்னிலும் தன் ஆசான் மாரின்
தகமையெ எனப் புகழ்வாய் அன்றோ
வண்ணமார் கல்வி ஏன்றே
வாழ்வினில் இலக்காய் கொண்ட
அன்னையின் அன்பு மிக்கோய்
ஆசானே! உனக்கு ஈடும் உண்டோ

பெற்றோர்கள் மனமுவந்து வாழ்த்த
பெற்றமகனே மாணவர்கள் விம்ம
வற்றாது வாவியாம் அன்பை
வயிறார உண்ணவைத்தாய்
பற்றோடும் பாசத்தோடும் வளர்த்த
பாங்கான எம் கல்வித்தாயாள்
நற்பெரு மாணிக்கத்தை இழந்து
நாணியே அழுகின்றாளே
ஒருவருக்கும் பொல்லாங்கு எண்ணா நெஞ்சன்
ஒரு போதும் கடமை தவறாத் தீரன்
திருநிறைந்த கல்லூரி ஸ்ரான்லி தன்னை
திக்கெட்டும் புகழ்பரப்ப செய்த மேலோன்
பெருமையுடன் அகவை அறுபதனைத் தாண்டி
பெறுகின்றான் ஓய்வுதனை இந்த நாளில்
கருணை யுடன் ஈசன் இவன் கடமை கண்டு
களிப்புற்று மனமுவந்து ஆசிநல்க
அருள் பெற்றாய் ஆதவன் போல் இந்த மண்ணில்
அழியாத புகழ் பரப்பி வாழி நீடு

விகடகவி மு.திருநாவுக்கரசு
ஓய்வுபெற்ற நீதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் உயர்திரு.வி.மாணிக்கம்



யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு.வி.மாணிக்கம் அவர்கள் அகவை அறுபதை அடைந்து மணிவிழாக் காணும் விழாவிற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மனதார மகிழ்ச்சியடைகின்றேன்.

அதிபராகப் பொறுப்பேற்று முதலாம் தர அதிபராக உயர்வு பெற்று இலங்கை கல்வி நிர்வாக சேவையாளனாக மணிவிழாக் காணும் அதிபர் பாராட்டுக்கள் பலவற்றிற்கு தகுதியானவரே.

இவரை ஆட்பதிவுத் திணைக்கள, உயர் நீதிமன்ற எழுது வினைஞராக நான் நன்கறிவேன். எடுத்த காரியத்தை திறம்பட நிறைவேற்றுவதில் சிறந்த அரச உத்தியோகத்தவராகவும், அதில் பெற்ற முன் அனுபவம், சிறந்த நிர்வாகத் திறன் பெற்ற அதிபராகவும் செயலாற்றி மணிவிழாக் காண்கின்றார்.

இக்கல்லூரியில் அவரது நீண்ட காலச் சேவையில் பாடசாலை கண்ட நல் நிகழ்வுகள் நினைவு கூறத்தக்கவை, 75வது வருட பவள விழாவும் கனக ஜோதி மலரும், 80வது வருட அமுத விழாவும், அமுத ஜோதிமலரும், இவரது சேவைக் காலத்தில் நினைவு கூரத்தக்க அடைவுகளாகும்.

நாட்டின் அமைதி குன்றிய கால கட்டத்தை விட கடந்த கல்வியாண்டில் பல மாணவர்கள் பல்வேறு துறைகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்றமையானது இவரது நிர்வாகத் திறன் மேற்பார்வை வினைத்திறமையினது பிரதிபலன் என்றால் மிகையாகாது.

புதிய விஞ்ஞான கூடம், புதிய வகுப்பறைகள் கொண்ட மாடிக் கட்டிடம் என்பன இவரின் பங்காற்றலின் பயன்கள், இவருக்கு கல்விச் சமூகம் மணி விழா எடுப்பது சாலச் சிறந்ததாகும்.

மணிவிழா நாயகன் தனது ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தாருடன் நோய், நொடியின்றி எல்லாச் சிறப்பும் பெற்று நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.A.N.செல்வராஜா**
**தலைவர்,**
**பழைய மணவர் சங்கம்**
**யா/ கனகரத்தினம் மகா வித்தியாலயம்.**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் எம் கல்லூரி முதல்வருக்கு



யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் (ஸ்ரான்லிக் கல்லூரி) பதினாறு ஆண்டுகள் முதல் வராகச் சேவைசெய்து தனது அறுபதாவது அகவை நிறைவை. எம்முடன் கொண்டாடும் அதிபர் உயர்திரு வி.மாணிக்கம் அவர்களை வாழ்த்துவதில் பேருவகை கொள்கிறேன்.

கல்வித்துறையில் முப்பதுவருடமாக பொறியியல் துறை. கலைத்துறை வணிகத்துறை என்பனவற்றுக்க பல்கலை க்கழகப் புகுதல் வீதஅதிகரிப்பு, தேசிய விளையாட்டுப் போட்டிகளில் திறமை போன்றன அதிபரின் செயற்றிறனுக்குக் கிடைத்த புள்ளிவிபர அறுவடையாகும். பிற பிரபல பாடசாலைகளில் அனுமதி கிடைக்காதவர்களை உள்வாங்கி அப் பாடசாலைகளுக்கே முன்மாதிரியான பரீட்சைமுடிவுகள் மூலம் தன் ஆளுமைத் திறனை வெளிப்படுத்தியவர் என்றால் மிகையாகாது.

நாட்டின் சீரற்ற போக்குவரத்து நிலைமையிலும் நமது பாடசாலை அணியை கொழும்பு மாநகருக்குக் கொண்டு வந்து பங்குகொள்ளவைத்தமை அவருக்கு விளையாட்டின் மீது இருந்த அக்கறையை உணரவைத்தது எனலாம். எதிர்காலச்சந்ததி கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது தொடர்பாடல் முற்றும் முகாமைத்துவத்திறன் கொண்டதாக அமைய வேண்டுமென்ற நோக்கில் மாணவர் மன்றங்களை உருவாக்கி அம் மன்றங்கள் ஊடாக அவர்களை முன்னிலைப்படுத்தியுள்ளார்.

இதேநேரம் நாட்டில் சீரற்ற நிலைமையிலும் கொழும்பில் கல்லூரிக்கு பழையமாணவர் சங்கம் இருக்க வேண்டிய தன் அவசியத்தை எமது சங்கத்தினை உருவாக்குவதில் அதிபர்காட்டிய ஆர்வமும் அதனை நிறைவேற்றிய விதமும் தானும் சமுகம் தந்து நிகழ்வு களைச் சிறப்பித்து தொடர்ந்து இறுக்கமான உறவைப் பேணிவரும் அவரின் ஆளுமையை நாம் பழகி கண்கூடாகவே கண்டோம். எல்லா வற்றிற்கும் மகுடம் சூட்டினாற் போன்று கல்லூரியின் பவளவிழா, அமுத விழாக்களை மிகச்சிறப்பாக நடாத்தி முடித்து கல்லூரியின் இணையத்தளத்தையும் உருவாக்கி வரலாற்றுத் தகவலைப் பேண வழிசமைத்தமை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்று.

இன்று மணிவிழாக்கொண்டாடும் இவர் பல செல்வங்களும் பெற்று மென்மேலும் தனக்கும், எமக்கும் எமது நாட்டிற்கும் பெருமைசேர்த்து இன சன பந்தங்களுடன் நிறைவாழ்வு வாழவேண்டுமென இதய பூர்வமாக வாழ்த்துகிறோம்.

**திரு பூ. யோகநாதன் (சுங்கப்பணிப்பாளர்)**
**தலைவர், பழைய மணவர் சங்கம்**
**யா/ கனகரத்தினம் மகா வித்தியாலயம்.**
**கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரான்லியின் ஒளிவிளக்கு மாணிவிழா நாயகன் மாணிக்கம்

அதிபர் திரு.வி.மாணிக்கம் அவர்கள் கனகரத்தினம் மத்திய மகாவித்தியா லயத்தின் கல்வி, கலை, விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர். இவர் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு 17 வருடங்கள் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் தன்னலம் பார்க்காது சேவை புரிந்த முத்து என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.

எனது பள்ளிப் பருவத்தில் நான்கு வருடங்களுக்கு மேல் அவரது அன்பான அறிவுரைகளையும் வழிநடத்தல்களையும் கேட்டு ஒழுகியமையே இன்றைய எனது வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் வித்திட்டது எனலாம்.

அதிபர் அவர்களின் ஆளுமை, நற்பண்பு, மற்றும் கடின உழைப்பு என்பவற்றிற்கு இறைவனால் கிடைத்த பரிசே அவரது ஓய்வு பெறும் காலத்திலும் கூட இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்வு கிடைத்தமை பாராட்டுக்கும் மகிழ்ச்சிக்கும் உரியதாகும்.

கனகரத்தினத்தின் வளர்ச்சிக்கும் வித்திட்ட மாணிக்கமே பல்விளக்கம் கேட்டு ஸ்ரான்லி வந்த மாணவர்களுக்கு நல்விளக்கம் கொடுத்து வாழ்வில் நன்மை பெறச் செய்தவரே மங்காத புகழ் கொண்ட மாணிக்கம் ஐயாவே! தங்களின் தாராள மனம் கொண்ட சேவைதனை எப்படித்தான் வார்த்தைகளால் எடுத்தியம்புவது இன்று உங்கள் மணிவிழா நாளில் - நீவிர் பல்லாண்டு சிறப்புடன் வாழஉளமார வாழ்த்துகின்றோம்

**திரு. S. அகிலன்**
**கணக்காளர்**
**சமூக சேவைகள் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்புக்கு ஓய்வு இல்லை

திரு.வி.மாணிக்கம் அவர்கள் கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார் என்னும் செய்தியையும் அவருக்கு வாழ்த்துரை வழங்க வேண்டும் என்னும் செய்தியும் தாங்கிய கடிதம் கிடைத்தது. வி.மாணிக்கம் அவர்களுடன் எனக்குள்ள தொடர்பை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தேன். அவர் எனக்கு அயலவர். அவரது குடும்ப நிகழ்வுகள் அனைத்திலும் கலந்து கொண்ட நினைவுகள். அவரது பிள்ளைகள் அடியேனிடம் கல்வி பயின்றவர்கள் பண்பான பிள்ளைகள். இன்னும் ஆசிரியருக்கு கொடுக்க வேண்டிய மதிப்பை வழங்கி வருபவர்கள்.

திரு.வி.மாணிக்கம் போன்ற நீண்டகால கல்விச் சேவை உழைப்பாளர்கள் ஓய்வு பெறுதல் என்பது பெரிய இடைவெளியை ஏற்படுத்தும். அண்மைக்காலமாக மாணிக்கம் போன்ற சிலர் கல்வித்திணைக்களத்தி லிருந்து ஓய்வு பெற்று வருகிறார்கள். இதனால் ஏற்படும் வெற்றிடத்தை எவ்வாறு நிரப்புவது? இவ்விடயத்தை சிந்திக்கும் போது சேவையிலிருந்து விடுபடுதல்" என்பது துன்பத்தைத் தருவது நியாயமானது தானே!

ஓய்வு என்பது உழைப்புக்கு அல்ல! பாடசாலைக் கடமையிலிருந்து மாற்ற மடைந்து வேறு உழைப்புக்கு மாற்ற மடைகிறீர்கள். உங்களை வரவேற்க வேறுபல துறைகள் காத்திருக்கும் அங்கு உங்கள் அனுபவத்தைச் செயல் படுத்துவதன் மூலம் "முதுமை" மகிழ்ச்சிக்குரியதாக மாறும்.

திரு.வி.மாணிக்கம் சைவபரிபாலன சபையின் நீண்டகால உறுப்பினராகவும், நிர்வாகசபை உறுப்பினராகவும் இருந்து வருபவர். சபையின் பரீட்சைப்பகுதியின் உபகுழு உறுப்பினராக இருந்து நல்ல ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இந்தச் சமூகப்பணிக்கு மேலும் அர்ப்பணிப்புக் கிடைக்கும் என்பதில் எனக்கு மகிழ்ச்சி.

செயல்வழிச் சாதனைகள் செய்து புகழ்பூத்த மனிதராக கல்விச் சேவை யிலிருந்து மகிழ்வுடன் வெளியேறும் தாங்கள், ஆரோக்கியமான உடல், உளநலத்துடன் நிறைந்த வாழ்வு வாழ்வதற்கு கணபதியை பிரார்த்தனை செய்கிறேன்.

**செஞ்சொற்செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**
**கௌரவபரீட்சைச் செயலாளர்**
**சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை 60இல் அதிபர் திருமிகு.வி.மாணிக்கம்

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியா லயத்திற்கு பொற் காலத்தை தந்த புகழ் பூத்த அதிபர் களின் வரிசையில் திரு.வி. மாணிக்கம் அவர்களும் ஒருவர்.

இலங்கை கல்வி நிர்வாகசேவை (S.L.EAS) ஐச் சேர்ந்தவராக இப்பாடசாலை அதிபர் கதிரைவை அலங்கரித்த ஒருவராக இவர் மட்டுமே உள்ளார். இவரது மேன்மைக்கு தக்கசான்று தனது பதவிக்காலத்தில் பாடசாலைக் காகவே தன்னை அர்பணித்து இப் பாடசாலையை பாடவிதானச் செயற் பாடுகளில் மேன்மையுற வைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம் பரியத்தில் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் பதித்த சாதனை முத்திரைகளின் தொடர்ச்சியாக இவரது அதிபர் காலமும் பெயர் கூறத்தக்கதாகவே உள்ளது. புாடசாலையின் மேன்மைக்காக ஆசிரியர்களை, மாணவர்களை கல்விசாரா ஊழியர்களை இவர் அரவணைத்த பாங்கு தனித்துவமானது. பாடசாலை அபிவி ருத்திச் சங்கம் பழைய மாணவர் சங்கம் போன்ற அமைப்புக்களையும் தனித் துவமாக இயங்கச் செய்து பாடசாலையின் வெற்றிகரமான செயற்பாடுகளை ஒருங் கிணைந்த ஆற்றலாளன்.

பாடசாலையின் சிறப்பான இயக்கத் திற்குத் தேவைப்படும் வளங்களை உயர் அதிகாரிகளுடன் அன்பான உறவுகளை பேணிக் கொண்டு வந்த திறமை மெச்சுதற்குரியது. நிலத்திலும் புலத்திலும் வாழும் பழைய மாணவர் நலன் விரும்பிகளின் துணையுடன் சிறப்பான தலைமைத்துவத்தை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு வழங்கியுள்ளார்.

ஆற்றல், அறிவு, இனிமை சேர்ந்த இம் மாபெரும் கல்வியாளன் தனது ஓய்வுக்காலத்தை பயனுறக் கழிக்க விடை தருகின்றோம். இவரது சேவை இப் பாடசாலையின் மூச்சுக்காற்றாக எம்முடன் உலாவரும் என்பதில் ஐயமில்லை.

**செயலாளர்**
**இ. கந்தசாமி (J.P)**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
**யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dear Mr Manickam
Gentle and kind
Supports our STEPS Institute
Up front and behind
Welcomes our visitors
With such a nice smile
Ensures STEPS Openings
Are done in great style.
Dear Mr Manickam
Thoughtful and fair -
If not, STEPS Institute
Wouldn't be there!

With thanks and appreciation for all your great support and resourcefulness. Congratulations on your Diamond Jubilee in service and may you have many more fruitful years to come, safe guarding the education of the next generation.

All the very best from
Psyche Kennett, Team Leader
GTZ Performance Improvement Project



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரவணைக் கடல் நீர் எரியும் வேலணை சிற்றருவியும்

இன்று சர்வதேச நுண்திட்டங்கள் பற்றிய ஆய்வுகளிலும், அவற்றை விருத்தி செய்வதிலும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பகுதி (UNDP) அரசுகள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் பல கூடிய கவனம் செலுத்துகின்றன. நுண்திட்டங்கள் மூலம் குறித்த பிரதேசத்து பௌதீக வளங் களையும், மக்களையும் தொடர்புபடுத்தி அபிவிருத்தி காணும் முயற்சிகள் மூலம் இன்று அபிவிருத்தியில் முன்னிலைப் படுத்தப்படுபடுகின்ற கிராமிய அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, பெண்கள் வலுவூட்டல், மனிதவள மேம்பாடு, சூழற்பாதுகாப்பு அடைந்து, நிலைத்து நிற்கக் கூடிய பொருளாதார அபிவிருத்தி யைக் காணலாம். குறைந்த நிதியுடனும், மக்களை இலகுவாக அணிதிரட்டி, அவர்களின் கூடுதலான பங்களிப்புகளுடனும், நுண்திட்டங்களை மேற்கொள்ள முடியும். இத் திட்டங்களின் பயன்களையும் இதன் பயனாளிகளின் முன்னேற்றங்களையும் இலகுவாக இனங்காணவும், கண்காணிக்கவும் முடியும்.

பெரும் திட்டங்களில் ஏற்படும் வளவிரயம், ஊழல், இலக்கு தோல்விகளின் கடும் பாதிப்பு நுண்திட்டங்களில் மிகக் குறைவாகும். இந்தியாவில் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்களில் கிராமிய பொது வேலைகளில் அரசு மக்களுக்கு வேலை செய்வதற்கு சந்தர்ப்பங்கள் கொடு துள்ளது. இக் கருப்பொருளின் அடிப்படை யிலேயே இக் கட்டுரை அமைகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாடு 25க்கு மேற்பட்ட பெரிய, சிறிய நுண்ணிய நிலத்திணிவுகள் கடல் நீரேரிகளால் பிரிக்கப்பட்டுள்ளன. குடாநாட்டில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குளங்களும், சிறுநீர்க் குட்டைகளும் காணப்படுகின்றன. குடாநாட்டில் சிறிய பல பருவகால அருவிகள் உள இவற்றுள் மிக முக்கியமானதும், நன்கு அறியப்பட்டதும் வழுக்கையாறாகும்.

பல பருவகால அருவிகள் இருந்தபொழுதும் அவைகள் பற்றிய ஆய்வு இடம்பெற்றதும், எழுதப்பட்டதும் மிகக் குறைவாகும். பருவகால சிறு அருவிகளுள் சரவணைக் கடல் நீரேரியும், வேலணைச் சிற்றருவியும் அடங்கும், குடாநாட்டிற்கு மேற்கே பல தீவுகள் வெவ்வேறு பரப்புக்களில் அமைந்துள்ளது. அட்டவணை ஒன்றில் இத் தீவுகளும் இத் தீவுகளின் பரப்பளவுகளும் தரப்பட்டுள்ளன.

**வேலணைத் தீவின் நீரேரிகள்**

இத் தீவுகளுள் மிகப்பெரியது வேலணைத் தீவாகும். இது 6401 ஹெக்டர் நிலப்பரப்பை உடையது. சரவணைக் கடல் நீரேரியும் சுருவில் குடாக்கடல் நீரேரியும் இத் தீவின் பெரும்பகுதித் தரைக்கீழ் நீரின் உவர்த்தன்மையைத் தீர்மானிப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அல்லைப் பிட்டி, மண்கும்பான், சாட்டி பகுதிகளிலேயே சிறந்த தரமான நீர் இருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட நீரேரியும், அருவியும் வேலணைத் தீவாகும். நடுப்பகுதியில் உள்ளன. 7 கிலோமீற்றர் நீளமான இவ்வருவி கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் உயர்மழை வீழ்ச்சி பெறும் காலங்களில் கல்லாண்டுமுனங்கில் உற்பத்தியாகி வேலணை கிழக்குக் கிராமங்களினூடாக ஓடிக்கண்ணா வோடையில் சரவணைக் கடல் நீருடன் இணைந்து (நாவாய் வெட்டிய் வாய்க்கால்) நாய்க்குட்டி வாய்க்கால் பகுதியில் கடலுடன் சங்கமிக்கின்றது. இவ்வருவி வேலணை தெற்கு அம்மன் கோவிலடி, வங்களாவடி, கூழாதோட்டம், தாழிபுலம், ஆலம்புலம், அச்சுவாலி, நாவலடிப்புலம், கண்ணா வோடை, சோழாவத்தை, பள்ளம்புலம், மயிலப்புலம், சரவணை ஆகிய கிராமங்களையும், அராலி தரவைப் பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதாக அமைகின்றது. இதன் வடிகால் அமைப்பின் மொத்த நிலப்பரப்பு 1500 ஹெக்டராகும்.

இவ் அருவியின் வடிகால் பண்பை ஆராய்வதற்கு இப் பிரதேசத்தின் புவிச்சரிதவியல், நுண்பௌதீக நிலவுருவம், மழைவீழ்ச்சி ஆகிய வற்றை நோக்குவது பொருத்தமாகும். புவிச் சரிதவியல் ரீதியில் இப் பிரதேசத்தை இரு பிரிவுகளாக நோக்கலாம்.

1. ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் வீதிக்குத் தெற்கேயுள்ள பிரிவு
2. இவ் வீதிக்கு வடக்கேயுள்ள பிரிவு

தென்பிரிவில் கண்ண அமையற் பாறைகள் காணப்படினும் அவை வடக்குப்பாறைகளை விட வயதிற் கூடியவையாகவும், இறுக்கமான கற் பகுதிகளாகவும் உள்ளன.

வடபகுதிஅண்மைக்காலப் படிவுகளைக் கொண்டுள்ளன. இவை சிப்பி, சங்கு, ஊசி ஆகியன நிறைந்து விளங்கும். இளகிய உவர்மண் திடலாகக் காணப்படுகின்றன.

**சிற்றருவியின் தரைத்தோற்ற பிரிவுகள்**

இச் சிற்றருவியின் வடிகால் பகுதியின் நுண்தரைத்தோற்றத்தை 3 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. சிற்றருவி ஆரம்பமாகும் நீரேந்தும் மேற்பகுதி,
2. நீரேந்தும நடுப்பகுதி
3. நீரோந்தும் கீழ்ப்பகுதி

மேற்பகுதியின் சராசரி உயரம் 10 அடிக்கு மேற்பட்டது. கல்லாண்டு, முனங்குப் பகுதி கடல் மட்டத்திலிருந்து 13 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இதுவே இத் தீவின் அதி உயரமான இடமாகும். இப் பகுதிக்குள் கள்ளக்கடவை, தென்காட்டுப்ப குதிகள் உள்ளடங்குகின்றன.

அருவியின் நடுப்பகுதி 5 அடிக்கும் 10 அடிக்கும் இடைப்பட்ட உயரத்தை உடையது. பெருங்குளத்தின் தென் பகுதியிலிருந்து வடக்கே ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் வீதிக்குக் கிட்டிய தூரம் வரையில் இடைப்பட்ட பிரதேசம் அருவியின் நடுப்பகுதிக்குள் அடங்கு கின்றது. இப்பகுதிக்குள் இயற்கையாக அமைந்த சிறு உயர வேறுபாடுகளைத் தவிர கடந்த 30 வருடங்களாக நெற்செய்கைப் பிரதேசங்களாக இருந்த தாழ்நிலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டு மண் மூலம் உயர்த்தப்பட்டு தோட்ட நிலங்களாகவும் வாழ் விடங்களாகவும் மாறியுள்ளன. இம் மாற்றத் திற்கு உட்பட்ட நிலங்கள் சராசரியாக 2 -3 அடியால் உயர்ந்துள்ளன. ஆகவே இப்பிரதேசத்தின் நுண் உயர மாற்றத்தில் மனித செயற்பாடு பெரும் பங்களிப்புச் செய்துள்ளது. இம் மாற்றத்தால் அருவியின் இயல்பான வடிகால் ஒழுங்கு பாதிப்புக்குள்ளாகி உள்ளது.

### அருவியின் நீரேந்தும் பகுதி

அருவியின் நீரேந்தும் கீழ்ப்பகுதி தரவை நிலங்களையும், சதுப்பு நிலங்களையும் சரவணைக்கடல் நீரேரிப் பகுதியையும் வெள்ளம் தேங்கும் பகுதியான அராலி வீதி 3ஆம் கட்டைப் பிரதேசங்களையும் உள்ளடக்கியது. இப்பிரதேசம் முழுவதும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் ஒரு சில மண்மேடுகளைத் தவிர ஏனைய பகுதிகள்யாவும் நீர் மேவி நிற்பதைக் காணலாம். மழை காலம் முடிய நீர் வற்றிச் சென்று ஆவணி புரட்டாதி மாதங்களில் முழுப் பிரதேசமும் புழுதி நிறைந்த வரண்ட நிலங்களாக் காணப்படும். இப்பகுதியில் கோடைகால நண்பகலில் கானல்நீர் ஓடுவதைப் பார்க்கலாம் உப்பு விளைந்து நிலம் பகலில் பிரகாசமாகத் தென்படும்.

### மழைவீச்சி

வடிகால் பிரதேசத்தின் மழைவீழ்ச்சி யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழை வீழ்ச்சியின் பருவ ஒழுங்கை ஒத்திருந்த போதும் மழைவீழ்ச்சி அளவில் சற்றுக் குறைவாக உள்ளது. பல சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணப் பகுதியில் மழை பெய்யும் போது மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கு அப்பால் மழை பெய்யா திருந்தமை கட்டுரை ஆசிரியரால் அவ தானிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கை விவசாய சூழலியல் பாகுபாட்டில் D.L3 பிரிவுக்குள் அடங்க, இவ்வடிகாற் பிரதேசம் DL4 பிரிவுக்குள் அடங்குகின்றது DL4 பிரிவு DL3 பிரிலும் பார்கக் விவசாயக் சூழலியலில் வரட்சி உவர்த்தன்மை கூடியதாகும்.

### அருவிபாயும் வழி

வேலணை அருவிபாயும வழியை நோக்கின் இது குளங்களையும், சிறிய ஒடுங்கிய வாய்க்கால்களையும், இணைத் ததாக உள்ளது. சில பகுதிகளில் அருவி பரவிப்பாய்கின்றது. இது கல்லாண்டு முனைப்பகுதியிலிருந்து ஆரம்பமாகி ஏறத்தாழ 1.5 கிலோமீற்றர் தூரம் வடக்காக ஓடி பெருங்குளத்தில் இணைகின்றது.

மேலும் ஒரு கிளைபெரும்படை ஐயனார் கோவில் பகுதியிலிருந்து உருவாகி பெருங்குளத்தை அடைகின்றது. இக்குளம் அண்மைக்காலத்தில் விருத்தியாக்கப்பட்டு, குளக்கட்டு உயர்தப்பட்டுகுளம், ஆழமாக்கப் பட்டிருப்பதால் குளத்தில் நீரின் கொள்வனவு அதிகரித்துள்ளது. குளத்தில் நீ நிறைந்து இருக்கும் போது செட்டிபுலக் கடற் கரையில் புல்லோடையில் சிறிய நன்னீர் ஊற்று ஒன்று தொடர்ச்சியாக ஓடிக்கடலை அடைவதைக் காணலாம். காங்கேசன்துறை ஊரணியில் இத்தகைய பண்பைக் காணலாம். இது சுண்ணாம்புக் கற்பிரதேசங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் பண்புகளில் ஒன்றாகும். கீரிமலை ஊற்றைப் போன்ற மிகச்சிறிய ஊற்று இது பெருங்குளக்கரையில் பிரசித்தி பெற்ற வேலணை முத்துமாரி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

வேலணை அருவி பெருங் குளத்திலிருந்து சிறு வாய்க்கால் வழியாக கூழாதோட்டம் தாழிபுலம் ஊடாக வளைந்து வளைந்து ஓடி நவக்கைக் குளத்தை அடைகின்றது. இக்குளம் நிர் நிரப்பி நீர் கோடாலி வயல் வாய்க்கால் வழியாக ஆலம்புலம் நீரையும் சேர்த்துக் கொண்டு முந்தாய் குளத்தை அடை கின்றது.

இக்குளம் அண்மையில் விருத்தி யாக்கப்பட்டு இதன் நீரின் கொள்வனவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் வரட்சிக் காலங்களில் முன்னர் போல் நீர் முற்றாக வற்றுவதில்லை. இக்குளத்தின் தென் பகுதியில் கோடையில் நீர் வற்றி அதன் தளம் காய்ந்து பெருக்காக மாறும் போது விவசாயத் தேவைக்காகக் குளப்பொருக்கு பசளைத் தேவைக்கு அள்ளப்படுகின்றது.

இக்குளத்தின் கிழக்குப் பகுதியில் கட்டுவயற் கருதியும். வடமேற் குப்பகுதியில் அக்காவாலிக் கிராமமும், அமைந்துள்ளன.

கடும் மழை காலங்களில் குளத்தில் நீர் நிரப்பி கட்டுவயற்பகுதிக்குள்ளும் அக்கவாலிக் கிராமத்திற்குள்ளும் பரவுவது உண்டு இச் சந்தர்ப்பங்களில் நீர் வடிந்தோடும் வரை பொறுமை காக்காது வெள்ளத்தாற் பாதிக்கப்படுவோர் கிழக்கு அணையை வெட்டி நீரைத்துரிதமாக வெளி யேற்றி விடுவர். இதனால் வெள்ளத்துடன் தேக்கி வைத்திருக்கக்கூடிய நீரின் ஒருபகுதியும் வெளியேறிப்பயனற்றுப் போகின்றது. அணையும் அடிக்கடி சீர்செய்ய வேண்டியுள்ளது இக்குளத்தின் கரையில் மிகப்பெரிய ஆலமரத்துடன்கூடிய கோபுரத்தடிவைரவர் ஆலயம் உள்ளது. முந்தாய்க் குளம் நீர் நிரப்பி அதன் வடக்கு கிழக்குக் கால்வாய்கள் வழியாக வெளியேறும் வடக்கு வாய்க்காலின முற்பகுதி தற்பொழுது தூர்ந்துள்ளதால் நீர் வெளியேற்றம் கிழக்கு வாய்க்கால் மூலமே நடைபெறுகின்றது. இங்கிருந்து வெளியேறும் நீர் 'மெலிஞ்சினா வெளித் தரவைப் பகதியில் பரவி ஓடி சோனகள் காட்டுத் தெற்குக் கால்வாய் வழியாகவும் மூந்தாய் வடக்குக் கால்வாய் பிற்பகுதி வழியாகவும் பாய்ந்து கண்ணாவோடைக் குளத்தை அடைகின்றது. இக் குளத்திலிருந்து யாழ்ப்பாணம் - புங்குடுதீவு வீதியில் அமைந்துள்ள கண்ணாவோடை மதகு வழியாக அருவி வீதியைக் கடந்து கண்ணாவோடை வாய்க்கால் வழியாக அதிசய வைரவர் கோவில் வரைசென்று சரவணைக்கடல் நீரேரியுடன் சேர்ந்து ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் வீதி 6 ஆவது கட்டை மதகு வழியாக வடக்கு நோக்கிப் பரய்ந்து நாய்க்குட்டி வாய்க்கால் நீர் தடுப்பைக் கடந்து கடலை அடைகின்றது.

சரவணைக்கடல் நீரேரிப் பகுதிக்குள் வரும் இந் நீர் பரந்த பிரதேசத்தில் பரவிக் காணப்படுவதுடன் சரணைச் சுடலைப் பகுதியில் இரண்டாகப் பிரிந்து பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் ஒன்றாக இணைந்து காணப்படுகின்றது. சரவணைப்பகுதியில் நீர் முற்றாக வற்றும்போது, உப்பு விளைந்தும், சூரிய ஒளி தாக்கத்தால் பகலில் நிலம் பிரகாச மாகக்காட்சிதரும்.

**நீரேரிக்கான நீர்வரவு**

வேலணைச் சிற்றாருக்குப் பின்னர் சரவணை நீரேரிக்கும் மழை காலத்தில் பல வாய்க்கால்கள் வழியாக நீர்வரவு காணப்படுகின்றது. பின்வரும் வாய்க்கால்கள் குறிப்பிடத்தக்கவை.

01. பெருங்குளத்திலிருந்து கிழக்கே உள்ள செல்வநாயகம் வீதி, இராசவீதிப்பகுதி நீர், இது வாய்க்கால் வழியாக மேற்கு நோக்கிச் சென்று பெருங்குளத்தை அடைகின்றது.

02. செட்டிப்புலத்திலிருந்து மேலதிகமாக ஓடும் நீர் வெட்டுக்குளத்தை அடைந்து ஒடுக்கமான வாய்க்கால் வழியாக வடக்கு நோக்கிச் சென்று உப்புக்குழிக்குளத்தை அடைகின்றது. இக்குளத்திற்கு சாட்டிக்கு மேற்காகவுள்ள பகுதி நீரும் வந்து சேருகின்றது.

இக்குளத்திலிருந்து மேலதிக நீர் கிழக்குக் கட்டுவயல் தரவைக் பகுதி ஊடாகப் பரவிப் பாய்ந்து சண்டைக்காடு, புட்டிவளவு பகுதிநீரையும் சேர்த்து சோனகன் காட்டு வடக்கு வாய்க்காலை மெலிஞ்சினா வெளியூடாகப் பரவிப் பாய்ந்து சந்திக்கின்றது.

3. வேலணை மேற்கிலிருந்து நாலா வரையிலிருந்து கிழக்கு நோக்கி வாய்க்கால் வழியாக ஓடிவரும் நீர் பழைய பஸ் கம்பனிக்கு அண்மையில் பெருங் குளத்தை அடைகின்றது.

4. கொட்டப்பெட்டி மூலைக்குக் கிழக்காக ஆரம்பமாகும். ஒரு சிறு வாய்க்கால் நவக்கை சங்கக் கடைக்கு அண்மையாக அரசடி மதகு வழியாக நவக்கைக் குளத்தை அடைகின்றது.

5. இலந்தைக்காட்டுப் பகுதியில் இருந்து ஆரம்ப மாகும் ஒரு சிறுவாக்கால் அப் பகுதிக்கு மேலதிக நீரைக் கிழக்கு நோக்கி எடுத்துச் சென்று கோடலி வயல் ஊடாக முந்தாய்க் குளத்ததை அடைகின்றது.

6. ஆரவயற் பிட்டியில் ஆரம்பமாகும் வாய்க்கால் இணுக்கவயல் ஜவந்திடல் வயல் பகுதி வழியாகச் சென்று புதுக்குளத்தை அடைகின்றது. இக்குளத்திற்கும் பள்ளப் புலம் பகுதியில் இருந்து பிறிதொரு வாய்க்கால் மூலம் நீர் சேருகிறது. குளம்நிரம்பும் காலத்தில் அதனது வடக்கு வாய்க்கால் வழியாக நீர் கண்ணாவோடை மதகடியில் பிரதான அருவியைச் சந்திக்கின்றது இக்குளம் அருகே பிரசித்திபெற்ற நாச்சிமார் கோவில் அமைந்துள்ளது.

7. சோழவத்தை பள்ளப் புலம் பகுதியில் இருந்து ஆரம்பமாகும் வாய்க்கால்கள் சரவணைக் கடல் நீரேரியை அது ஆரம்பமாகும் இடத்தில் சந்திக்கின்றது.

8. சரவணை கிழக்கில் இருந்து சூளையுண்டான் குளத்தை மையமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட வாய்க்கால் கிழக்கு வடக்காகச் சென்று யாழ் ஊர்காவற்றுறை வடக்கு வீதியில் ஏழாம் கட்டையில் சரவணைக் கடல் நீரேரியுடன் இணைகின்றது.

9. சரவணை மேற்கில் இருந்து ஆரம்பமாகும். வாய்க்கால் கெங்கங்குளம் (நாச்சிமார் கோவிலடிக்குளம்) தெற்கில் வேலணை புளியங்கூடல் சந்தி வீதிக்கு தெற்காக உள்ள குளத்து நீரைப்பெற்று நிரம்பி வாய்க்கால் வழியாக கிழக்காகச் சென்று கட்டுவன்குளத்தை நிரப்பி சரவணை கிழக்கு கட்டுவன் ஐயனார் கோவிலுக்கு அண்மையாகச் சென்று வடக்கு வீதியைக் கடந்து சரவணை கடல் நீரேரியைச் சென்று அடைகின்றது.

10. சரவணை கிழக்கு கெழுவுக்கேணி மேல் மேலதிக நீர் வாய்க்கால் சரவணை சுடலைக்கு அண்மையாக கடல்நீரேரியைச் சென்றடைகின்றது.

மேற்குறிப்பிட்ட வாய்க்கால்களைத் தவிர உள்ள பகுதியின் பிரதான வீதிக்கு வடக்கே உள்ள தரைப்பகுதி இடிவிழுந்த குன்றுக்கு மேற்காக நீர்முழுவதும் மேற்கு நோக்கி வடிந்து சரவணைக் கடல் நீரேரியை அடைகின்றது.

**தடுப்பணைகள்**

சரவணை கடல் நீரேரியானது வேலணை சிற்றருவியினது வாடிகாற் பிரதேசத்தின் அபிவிருத்தியை நோக்கி இப்பிரதேசத்தின் உவர்நீர் குடியிருப்புப் பகுதிகளுக்கு உட்புகாது தடுப்பதற்கு நீர் வெளியேற்றத்தை ஒழுங்கு படுத்துவதற்கும் 1950 களிலே இரு தடுப்பணைகளும் மேலதிக நீர் வெளியேற்று கதவுகளும் அமைக்கப்பட்டன.

நீண்டகாலமாக சரவணை அணையும் நீர் வெளியேற்றும் கதவுகளும் சரியான முறையில் பராமரிக்கப்படாததால் இத்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட பலனைப் பெறமுடியாது போய்விட்டது. தற்போது தடுப்பணையும் கதவுகளும் திருத்தப்பட்ட நிலையிலும் மண்கும்பான் அணை திட்டமிட்டபடி திருத்தப்படுமிடத்து எதிர் பார்க்கப்படும் பலன்களை அடையமுடியும். இதற்கு இப்பகுதி மக்களினது பங்களிப்பு பெரும் அளவிற்குத் தேவைப்படுகின்றது சரவணைக்கு வடக்கே சுருவிலில் அமைக்கப்பட்டுள்ள குடாக்கடல் உவர் நீர் தடுப்பு அணையால் சுருவில், சின்னமடு, புளியங்கூடல், சரவணையின் வடமேற்கு பகுதிகள் ஆகிய இடங்களின் நீர்வளம் குறிப்பாக உவர்த்தன்மை குறைந்துள்ளது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே இதனைப் போன்ற மாற்றம் சரவணை கடல் நீரேரித்திட்டம் சரியான முறையில் முகாமைப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படும் போது சரவணை கிழக்கு மயிலப்புலம் சோழர்வத்தை, பள்ளம்புலம், நாவலடிப்புலம் ஆகிய பகுதிகள் நீர்வளத்தில் நன்மையடைய முடியும்.

**மண் அகழ்வினால் பாதிப்பு**

வேலணைச் சிற்றருவியில் வடிகால் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள குளங்களின் மண் அள்ளப்பட்டு வயல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட்டுநிலங்களாக மாற்ற பயன் படுத்தப்பட்டுள்ளது. இதனால் இயற்கையான வடிகால் ஒழுங்கு முறை பாதிக்கப் பட்டுள்ளது. பெரு வீதிக்கு வடக்காப உள்ள பரவை நிலங்களினதும் மண் அகழ்கலால் நிலம் குன்றும் குழியுமாகக் காணப்ப டுகின்றது. இதனால் வாய்க்கால் பல இடங்களில் தடைப்பட்டும் தூர்ந்தும் உள்ளன. நீர் வடிதல் பாதிக்கப்படுவதால் நீர் தடைப்படும் இடங்களில் நீர் தேங்கி சதுப்புத் தன்மை ஏற்படுகின்றது. ஆகவே இப்பிர தேசத்தின் வடிகால் வலைப்பின்னலைச் சீர் செய்ய வேண்டியுள்ளது.

## நீர்வளத்தை உயர்த்தும் செயற் பாடுகள்

இப்பிரதேசத்தின் நீர்வளத்தையும் தரத்தையும் உயர்த்தும் போது பிரதேசத்தின் பொருளாதாரம் மேம்பட பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

1. வடிநிலப்பிரதேசத்தில் உள்ள குளங்கள் தூர்வாரப்பட்டு குளங்களின் நீர் கொள்வனவு உயர்த்தப்பட்டு நீரின் தூய்மையும் பேணப்பட வேண்டும்

இக்குளங்களை இணைத்து வாய்க்கால் கள் சீர் செய்யப்பட வேண்டும். இதனால் குளங்களை அண்டிய பிரதேசம் ஈரலிப்பானதாகவும் தரைக்கீழ் நீர் மீளவும் நிரம்பவும் வழிபிறக்கும். குளநீரை அடிப்படையாகக் கொண்டு ஏற்று நீர்ப் பாசனம் மூலம் விவசாயத்தை அதி கரிக்கலாம். ஏற்கனவே இக் குளங்களில் இருந்து ஏற்று நீர் பாசனம் மூலம் பயிர்செய்கைக்கு நீர் சிறிதளவு பயன்படுத்தப்படுகிறது. மேலும் கிராமத்தவர் தம் தேவைக்கு இக்குளத்தைப் பயன்படுத்தலாம்.

2. நாய்க்குட்டிவாய்க்கால் சரவணை அணையில் இருந்து கண்ணாவோடை வரை பரந்து இருக்கும் சரவணைக்கடல் நீரேரியின் உவர்த்தன்மையை குறைந்தது. இந் நீர் இப் பிரதேசத்தில் காணப்படும் பெருமளவு எண்ணிக்கையான கால் நடைகளில் பாவனைக்கு ஏற்றவகையில் உவர்நீரின் தரம் மேம்படுத்த வேண்டும். நீரின் தரம் மேம்படுத்த வடக்கு தரவை நிலம் தரமான புற்களைக் கொண்ட இயற்கையான மேய்ச்சல் நிலமாக மாற வழிபிறக்கும்.

3. இப்பிரதேசத்தில் நிலப்பயன்பாடு விவசாயம் ஆகியவற்றை இதனது இடஅமைவு மழை வீழ்ச்சி ஒழுங்கு ஆகியவற்றை சிறப்பாக கருத்தில் கொண்டு விஞ்ஞான ரீதியான முகைமைத்துவம் முன் எடுக்கப்பட வேண்டும். இப்பிர தேசத்தின் நீர்வளம் உவர்நீராக கூடிய வாய்ப்பு இருப்பதால் தரைகீழ் நீர்ப்பாவனை மட்டுப் படுத்தப்படதாக அமைய வேண்டும். ஆகவே இப்பிரதேசத்தில் பங்குனி, சித்திரைக்குப் பின்னர் பெருமளவு நீரைப் பயன்படுத்தும் பயிர்ச்செய்கை தவிர்க்கப்பட்டு வரட்சியைத் தாங்கக் கூடி நீர்ப்பாசனம் அற்ற சிறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட வேண்டும்

## மரநடுகைகள் மேற்கொள்வதன் அவசியம்

வடிநிலப்பிரதேசத்தில் தவரப்போர்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக்குறைவாக இருப்பது கடந்த இரு தசாப்தங்களாக பெரும்அளவு பனை, தென்னை அழிக்கப்பட்டு இருப்பதால் இப்பிரதேசத்தின் தாவரப்போர்வையை அதிகரிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். பெரு வீதிக்கு வடக்கே உள்ள பிரதேசத்தில் வரட்சியைத் தாங்கக் கூடிய மரநடுகை பெருமளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மரநடுகை மூலம் தாவரப் போர்வை அதிகரிக்க இப்பிரதேசத்தின் சூழல் இயல்புகள் பெரியளவில் மாற்றத்துக்கு உள்ளாகும். கடும் சோளகத்தால் வரட்சி ஆக்கப்படுவதும் மண்புழுதி ஏற்படுவதும் தடுக்கப்பட்டு காற்றின் வேகம் குறைக்கப்பட்டு ஓரளவு பசுமையான தோற்றம் பிறக்க வழிவகுக்கலாம்.

1991ஆம் ஆண்டு துன்பகரமான முழு இடப்பெயர்வுக்குப் பின் 10,000க்கு மேற்பட்ட மக்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர். இடப்பெயர்வு காரணமாக இப்பிரதேசத்தின் மக்கள் தொகை குறைந்தும் உட்கட்டு மானங்கள் அழிக்கப்பட்டும் வாழ்வியல் வாய்ப்புக்கள் குறைக்கப்பட்டும் உள்ளன. இந்நிலையில் இப்பிரதேசத்தின் மக்கள் தொகை குறைந்தும் உட்கட்டுமானங்கள் அழிக்கப்பட்டும் வாழ்வியல் வாய்ப்புகள் குறைக்கப்பட்டும் உள்ள இந்நிலையில் இப் பிரதேசத்தின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு புனருத்தாரன நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டியுள்ளன. ஆகவே இந் நடவடிக் கைகளில் சரவணைக்கடல் நீரேரியினதும் வேலணைச் சிற்றருவி வடிநிலத்தினதும் அபிவிருத்தி முக்கிய இடம்பெறவேண்டும். ஆகவே இவ் வடிநிலத்தில் கிடைக்கும் நீரைச்சரியான முறையில் தரைமேல் நீராகவும், தரைக்கீழ் நீராகவும் தேக்கி சிக்கனமாகப் பயன்படுத்தி இவ் வடிநிலத்தை உச்ச வினைத்திறன் மிகக் நிலப்பயன் பாட்டுக்கு கொண்டு வருவதுடன் பல தேவைகளுக்கு ஏற்ற நீரையும பெற முடியும்.

இதனால் குடிநீருக்காக சாட்டிநீரில் தங்கியிருகும் நிலையை குறைக்க முடிவதுடன் சாட்டிநீர்வளம் குறைந்து போவதையும் காக்கமுடியும்.

வழுக்கையாற்று அபிவிருத்திக்கு அடுத்து வேலணை அருவி நீரேந்து பரப்பு அபிவிருத்தியை முன்னெடுக்கலாம். நீர்வளம் குறைந்த தீவுப்பகுதியில் இத் திட்டம் நீர் ஆதாரத்தை மேம்படுத்த அமையலாம். சர்வதேச நிதிஉதவியும் நிறுவனங்களிடம் இத்தகைய நுண் திட்டத்திற்கு உதவி பெறுவது இலகுவாக இருக்கும்.

**வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை Ph.D (Durham)**
**முன்னாள் துணைவேந்தர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான சேவையாற்றி மணிவிழாக் காணும் நாயகரை வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையிலுள்ள மாணவ மன்றச் செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளித்து மாணவர்களின் தலைமைத்துவம் மற்றும் ஆளுமைப் பண்புகளை வளர்த்தெடுக்க உதவியதோடு தானும் மன்றக் கூட்டங்களில் கலந்து கொண்டு வேண்டிய ஆலோசனை களையும் வழிகாட்டுதல்களையும் வழங்கு வார். தனிப்பட்ட வாழ்விலும் சமூக வாழ்விலும் நல்லவர்களாக நாம்வாழ எமக்காகத் தன்னை அர்ப்பணித்து உழைத்தவர். பாடசாலையில் கொண்டா டப்படும் தமிழ்த்தினம், நவராத்திரிவிழா, ஒன்றுகூடல்வைபவம், குருபூசைத் தினங்கள், பரிசளிப்பு விழா, கலைவிழா, விளையாட்டுப் போட்டி, ஒளிவிழா மன்றங்களால் கொண்டாடப்படும் விழாக்கள், வெளியீட்டு நிகழ்வுகள் அனைத்தும் மாணவர்களின் பூரண பங்களிப்பினை பெற்றுக்கொள்பவர். சமய சமரசத்தை, விழுமியங்களைக் கட்டிக்காப்பதில் முன்னின்றுழைத்தவர். கணணிக் கல்வியறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டுமென விரும்பிய வர். அறிவியல் தொழில்நுட்பதுறைகளின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். எமது மன்றச்செயற்பாடுகள் அனைத்திலும் கலந்துகொண்டு எம்மையும் ஊக்கு வித்தவர். இத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்டு விளங்கிய அதிபர் இன்று 22.04.2010 தனது சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து மணிவிழா கொண்டாடுகின்ற அவரை எமது மன்றங்களின் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம். எல்லா நலன்களையும் இறைவன் அவருக்கு வழங்கவேண்டுமென இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

**மாணவர் மன்றங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பால் உயர்ந்த உத்தம புருஷர்



கடந்த பதினாறு ஆண்டுகளுக்கு மேல் யாழ்ப்பாணம் அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயததை வளமும், வாய்ப்பும், கல்வி நயமும், விழுமியப் பண்பும் விளங்குகின்ற கல்விக்கலையகமாக வழிநடத்திவந்த அக்கல்லூரியின் அதிபர் உயர்திரு. விநாயகன் மாணிக்கம் அவர்கள், தமது அறுபதாவது அகவை நிறைவில் 22.04.2010 அன்று ஓய்வு பெறுவதையிட்டுக் கல்லூரிச் சமூகத்தினரால் அன்னாரைக் கௌரவிக்கும் பொருட்டு வெளியிடப்படும் 'மாணிக்க ஜோதி" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் யான் மிகவும் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

இளம் வயதிலேயே தமது பெற்றோரை இழந்துவிட்டபோதிலும், 'உழைப்பே உயர்வுதரும்' என்பதற் கிணங்கச் சகோதரர்களின் உதவியுடன் தனது கல்வியை மேலெடுத்துச் சென்ற வெற்றியாளர் அவர். பத்தாண்டு காலம் (1972-1982) அரசாங்க எழுதுவினைஞராக கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பணியாற்றிய பின்னர் ஆசிரியர் சேவையில் நுழைந்தவர். 'மனம் போல வாழ்வு' என்பதற்கிசைவாக படிப்படியாக உயர்ந்து அதிபர் சேவையில் முதலாந்தரத்தை எட்டியவர். அரச சேவையில் உயர் பதவி வகித்த நன்மனையாளை இல்லறத்துணையாகவும், மூன்று மக்கட் செல்வங்களையும் கண்டு இன்புற்றவர். அவரது கல்விச் சேவையின் உச்சமாக இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் வகுப்பு III இனுள் கடந்த வருடம் முதல் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். தனது குணப்பண்புகளாலும் கல்விச் செயற்பாடுகளாலும் தகுதியும் தரமும் வாய்ந்ததோர் அதிபராகத் தம்மை யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலை நிறுத்தியவர் அவர்.

'மரம் கனிகளால் அறியப்படும்" என்பதுபோல திரு. மாணிக்கம் அவர்களது பெருமைகள் அவரது பணிகளால் அறியப்பட்டுள்ளன. 'உள்ளத்துள்ளது உயர்வு' என்ற வள்ளுவ வாசகத்தின்படி அவரது குடும்ப வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் மேன்மேலும் வளம்பெற எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சி, அவரது எதிர்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி. செ. திருநாவுக்கரசு**
**விரிவுரையாளர்,**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி உலகின் வழிகாட்டி

மணிவிழாக் காணும் எமது அதிபர் திரு. வி. மாணிக்கம் அவர்கள் தமிழ்கூறும் நல்லுலக கல்வி மேம்பாட்டிற்கு சேவையாற்றியிருக்கின்றார். அகவை அறுபதை நிறைக்கும் அதிபரைக் கௌரவிக்கும் முகமாக இன்று (2010-04-22) வித்தியாலயத்தில் அவரது பெருமைகள் தாங்கிவரும் 'மாணிக்கஜோதி' மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

கடந்த பல வருடங்களாக அரச சேவைகளில் அதாவது எழுதுவி னைஞராக, ஆசிரியராக, அதிபராக பன்முகங்களிலும் அவர் ஆற்றிய பணி அரியதாகும். கல்வித்துறை வளர்ச்சியில் அதிபர் காட்டிய பங்களிப்பினை 2001 முதல் 2009 வரையிலான காலப்பகுதியில் க.பொ.த. உயர்தரம், க.பொ.த. சாதாரண தரம் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கின்ற பொழுது அதன் சிறப்பு வீதத்தைக் காணமுடிகின்றது. குறிப்பாக 2008 இல் 2009 கால பரீட்சைகளின் பெறுபேற்று விகிதம் அதிகரித்து வருவதையும் உயர்தர விஞ்ஞானப்பிரிவு தளர்ந்திருந்த வேளையில் அதை மெருகூட்டி தற்காலத்தில் மருத்துவத்துறை, பொறியியல்துறை, கணனித்துறை, நில அளவையியல் துறைக்கு மாணவர்களை அனுப்பிய பெருமை எமது அதிபரின் சேவைக் காலத்தில் இடம்பெற்றது.

எங்கள் அதிபர் அவர்களுடைய காலத்தில்தான் 2005ம் ஆண்டு வெளிநாட்டிலிருக்கும் எமது பாடசாலையின் நலனில் அக்கறை கொண்ட பழைய மாணவியின் உதவியினைப் பெற்று பாடசாலையின் 6, 7, 8ம் தரங்களில் கற்கும் எழுத்தறிவு குறைந்த மாணவர்களை இனங்கண்டு தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை விசேட செயற்றிட்டம் மூலம் கற்பித்து அவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தியிருக்கின்றோம்.

நீண்டகாலமாக கல்லூரியில் ஆசிரியர் சேவையில் இணைந்தமையினால் அதிபர் அவர்களின் நற்பணிகள் புரிகின்ற வாய்ப்பு பகுதித் தலைவர்களாகிய எமக்கும் கிடைத்தது. தான் இளைப்பாறும் காலம் வரை எமது வித்தியாலயத்திலேயே அதிபர் பதவியை அலங்கரித்து ஓய்வு பெறும் எமது அிபர் எதிர்காலத்திலும் பல்வகைச் சிறப்புக்களோடும் திகழவும் எல்லா நலன்களையும் பெற்ற உயரவும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வகுதித்தலைவர்கள்**
**திரு.த. மோகனதாஸ் (க.பொ.த.உ/த)**
**செல்வி. லீ அம்பலவாணர் (தரம் 9-11)**
**திருமதி.ச.சேதுராசா (தரம் 6-8)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நிர்வாகி

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 17 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் உயர்திரு. வி. மாணிக்கம் அவர்களின் மணிவிழா நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி தெரி விப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அவருடைய பணிக்காலத்தில் அவரின் அமைதியான பார்வையினாலும் புன்முறுவலாலும் பக்குவமாய் எம் பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்கு எமை வழிநடத்திய செம்மல் ஆவார்.

எமது பணிகளை உரிய நேரத்தில் திட்டமிட்டுத் திருப்தியாக நாம் செய்து முடிப்பதற்கு சகல இலகுவான வழிகளையும், ஆலோசனைகளையும் எப்போதும் வழங்கி எமை நெறிப்படுத்திய முகாமையாளர் ஆவார்.

அதிபர் அவர்கள் தனது உன்னதமான சேவையின் மூலம் இப்பாடசாலையின் வளர்ச்சிக்குத் தன்னாலான சேவைகளை வழங்கி ஓய்வுபெறும் இவ்வேளையில் அவரது ஓய்வுக்காலம் உவப்பானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் அமைந்து என்றும் மாணிக்கஜோதியாய் சுடர்விட்டு ஒளிர எமது நல்லாசிகளை நவில்கின்றோம்.

**கல்விசாரா ஊழியர்கள்**
**யா/ கனகரத்தினம் ம.ம.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையே கண்ணானவர்



வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட உயர்திரு. வி. மாணிக்கம் யா/ வேலணை ம.ம.வி.இல் ஆறாந் தரம் தொடக்கம் என்னோடு ஒன்றாகக் கல்வி பயின்றவர். கல்வியோடு மட்டுமன்றி கரப்பந்து, உதைபந்து, மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளிலும், பங்கெடுத்துள்ளனர். பாடசாலை உதை பந்தாட்டக் குழவில் விளையாடிப் பாடசாலைக்குப் புகழ் சேர்த்துள்ளார். தனக்குச் சரியென்று பட்டதை வெளிப் படையாகக் கூறும் பண்பு கொண்டவர்.

நான் தற்போது கடமையாற்றும் யா/கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தில் அவர் அதிபராகக் கடமையாற்றிய போது மாணவரின் கல்வி முன்னேற்றத்திற்குப் பல செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். இவருடைய முன் முயற்சியுடன் ஆரம்பிக்கப்பட்ட யோகர்சுவாமி நிதியம் பாடசாலை ஏழைச் சிறாரின் கல்வி முன்னேற்றத்திற்கு இன்றும் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. 1993முதல் இன்றுவரை இந்நிதியத்தின் நிரந்தர உறுப்பினராக இருந்து பெறுமதியான பங்களிப்பை நல்கி வருகின்றார்.

இவர் யா/ கனகரத்தினம் ம.ம.வி.இல் அதிபராக இருந்து போரின் பின்னரான அபிவிருத்திச் செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றமையை அறியும் போது பேருவகை அடைகின்றேன். இவரின் கல்வி தொடர்பான செயற்பாடுகள் தொடரவும், ஓய்வு வாழ்க்கை சிறப்பாக அமையவும் வாழ்த்துகின்றேன்.

சா. தியாகலிங்கம்
அதிபர்,
யா/ கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பால் உயர்ந்த மாணவன்



திரு. விநாயகன் - மாணிக்கம் அவர்கள் யா/ கனகரத்தினம் மத்திய மகாவித் தியாலயம், யாழ்ப்பா ணம் அவர்கள் எனது அன்புக்கும் பண்புக்கும் பெருமதிப்புக்குரிய முதல் மாணவருடைய சேவை நயப்பு மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1956ம் ஆண்டு நான் துரைச்சாமி மத்திய கல்லூரி வேலணையில் ஓர் ஆசிரியனாக இருந்தபோது இவர் ஆறாம் வகுப்பில் போட்டிப் பரீட்சையின் மூலம் எனது வகுப்பில் இணைந்துள்ளார். இவரது இளம்பருவத்திலேயே சுறுசுறுப்பாகவும், விவேகமாகவும் உற்சாகத்துடன் காணப் பட்டார். 'விளையும் பயிரை முளையிற் தெரியும் என்பதற்கிணங்க இவர் சகல துறைகளிலும் நன்றாகத் தொழிற்பட்ட மையினால் எதிர்காலத்தில் நல்ல ஓர் இடத்திற்கு 'வருவார் என்ற எண்ணம் என்மனதில் பதிந்தது. மாணிக்கம் எல்லாப் பொருள்களிலும் பெறுமதி வாய்ந்தது அந்தப் பெறுமதிக்கேற்ப இவர் மனிதருள் மாணிக்கமாகவும் திகழ்ந்தார். பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

ஓர் ஆசிரியரிடம் காணப்பட வேண்டிய நற்பண்புகளான தருமம், நீதி, நேர்மை, அன்பு, அர்ப்பணிப்பு, பொறுமை, தெய்வபக்தி, தேசபக்தி ஆகியவற்றைத் தன்னகத்தே அணிகலனாகக் கொண்ட தனால் "குன்றின் மேலிட்ட தீபம்போல" இவருடைய நிர்வாகத் திறனை வெளிக்காட்டியது. இதனால் இவருக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் IIIக்கு உயர்த்தப்பட்டார். இவற்றிற் கெல்லாம் இவரின் சுயமுயற்சியே காரணமாகும்.

இதைவிட மேலான சிறப்பம்சம் எதுவென்றால் பாடசாலை நிர்வாகப் பொறுப்புக்களை சகல ஆசிரியர்களுக்குப் பகிர்ந்தளித்துத்தான் ஒரு முகாமைத்து வராகவிருந்து வழி நடத்தினார். இதனால் சகல ஆசிரியர்களும் இவர் மீது அதீத நம்பிக்கை வைத்தி ருந்தார்கள். கடந்த பதினேழு ஆண்டுகள் மகத்தான சேவையாற்றி தனது சேவையின் சிறப்பான மணிவிழாக் காணும் இவர் தமது குலதெய்வமாகிய வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்பாளின் அருளைப் பெற்று ஓய்வுகாலத்தில் தொடர்ந்தும் கல்வி, சமூக சேவையாற்றவேண்டுமென முத்துமாரி அம்பாளை வேண்டி வாழ்த்துகிறேன்.

**பொ. நடராசா**
**ஓய்வுபெற்ற ஆசிரியர்**
**யா/வேலணை சரஸ்வதி வித்தியாசாலை,**
**வேலணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைக்கற்களை படிக்கற்களாக்கியவர்



யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் பதினாறு ஆண்டுகள் அதிபர் பணி புரிந்து இன்று மணிவிழாக் காணும் திரு. வி. மாணிக்கம் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய சூழமைவில் பல சவால்களுக்கு முகம்கொடுத்து பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் தனிமனிதனாக நின்று எதிர் நீச்சலடித்து வெற்றிவாகை சூடவேண்டிய அதிபர் பணியை மிகவும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும், தன்னடக்கத்துடனும், பொறுமைகாத்து, கல்லூரியின் பாரம்பரியத்தையும் கட்டிக் காத்து வளர்த்த பெருமை இன்றைய விழா நாயகனையே சாரும் என்று கூறுவதில் பெருமையடைகிறேன். "நிமிர்ந்து நில், துணிந்து செல், தோல்வி கிடையாது" என்ற பொன்மொழிக்கிணங்க வாழ்ந்து காட்டியதோடு, செயல்வடிவமும் கொடுத்து கல்லூரியின் பெருமையை எட்டுத்திசையிலும் பரப்ப அல்லும் பகலும் உழைத்தவர். தர்மத்தின் வெற்றிக்காக சிலுவை சுமந்த யேசுவைப்போல பல துன்ப துயரங்களை கல்லூரி வளர்ச்சிக்காகச் சுமந்தவர். போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும், என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற மன உறுதியோடு போராடி உழைத்து அதில் வெற்றியும் கண்டு இன்புற்றவர். இத்தகைய பெருந்த கைக்கு கல்லூரிச் சமூகம் பெருவிழா எடுத்து கௌரவிப்பது பெருமைக்கு ரியதாகும்.

எமது கல்லூரியின் பழைய மாணவரான விழா நாயகன் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் முழு முக்குத் தெரிவாகியுள்ளமை இவரின் ஆளுமைக்கும், தலைமைத்துவத்திற்கும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவைக்கும் கிடைத்த பெரு வெற்றியென்றே கருது கிறேன். இவர் தனது அதிபர் சேவை யிலிருந்து ஓய்வு பெற்றாலும் கல்லூரியின் வளர்ச்சிக்குக் தொடர்ந்தும் தனது பங்களிப்பை வழங்கி, பதவி ஏற்கும் புதிய அதிபருக்கும் சிறந்த ஆலொசகராக விளங்கி தொடர்சேவையாற்றுவதோடு தனது ஆளமையால் சமூகப்பணி, அறப்பணிகளையும் மேற்கொண்டு தனது குடும்பத்தாருடன் நீண்ட ஆயளைப் பெற்று சிறப்பான வாழ்க்கையை வாழ எல்லாம் வல்ல வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானை இறைஞ்சுகிறேன்.

**அன்பு நண்பன் நா. வன்னியசிங்கம்**
**அதிபர்,**
**யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கலங்கரை விளக்கு

ஒரு அதிபர் எப்படி இருப்பார் அல்லது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கண மானவர் எமது வித்தியாலய அதிபர் ஆவார். அவரது ஆற்றல் மிக்க ஆளுமைத்திறன் மிக்க செயற்பாடுகளால் இன்று எமது பாடசாலை தலைநிமிர்ந்து நிற்கிறது எனலாம்.

கற்றலும் கற்பித்தலும் ஒருங்கே அமைதியான சூழலில் நடைபெற வேண்டும் என்பது அவரின் கொள்கை யாகும். பாடசாலை ஆரம்பிக்கும் போதும் இடைவேளையின் பின்னரும் அமைதி பேணுவதில் மிகவும் கண்டிப் புடன் செயற்படுவார். கல்வியோடு மாணவா களுக்கு பொது அறிவும் வழங்கப்பட வேண்டும் என்று ஒரு திட்டத்தை நடை முறைப்படுத்தினார். அதன்படி சுவர்களில் பதிக்கப்பட்ட கரும்பல கைகளில் பொது அறிவுகள் எழுதப்பட்டி ருக்கும் அத்துடன் வாசிப்பின் அவசியத்தை அடிக்கடி வலியுறுத்தி நூலகப் பயன்பாட்டிற்கு உதவுவார்.

இணைப்பாட விதானச் செயற் பாடுகளில் அவரது பூரணத்துவம் நோக்கிய பார்வை ஆழமானதாக இருக்கும். விளையாட்டுப் போட்டி பாடசாலையின் விழாக்கள் சிறப்பான வகையில் அமையவேண்டும் என்பது அவரது விருப்பு. இதற்காகத் தாமும் பங்குகொண்டு ஆசிரியர்கள் மாணவர்களையும் உரிய முறையில் பங்கேற்கச் செய்வார்.

நான் மாணவத் தலைவிகளின் தலைமைப் பதவியை அதாவது சிரேஷ்ட மாணவத் தலைவியாக இருப்பதற்கு எமது அதிபரின் நல் வழிகாட்டல்களே தூண்டுதல்களே காரணமாக இருந்தன என்பதை நன்றியுணர்வுடன் நினைவு கூறுகின்றேன்.

இவ்வாறு எமக்கு அறிவுரை கூறுவதில் நல்ல தந்தையாக அன்பு காட்டுவதில் நல்ல தாயாக முரண்பாடுகள் ஏற்படும்போது நல்ல நீதிபதியாக பல்வேறு படிவங்களில் திகழ்ந்த எமது அதிபர் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார் என்பது மன வேதனை தருகிறது. எனினும் அவர் பல்லாண்டு காலம் நலமாக வாழ இறைவனைப் பிரார்த்தித்து அவர் காட்டிய நற்பாதையில் நடந்து அவருக்கும் எமது பாடசாலைத் தாய்க்கும் என்றும் புகழ் சேர்ப்பேன் என்று உறுதி கூறுகின்றேன்.

பா.மிதர்சினி
சிரேஷ்ட மாணவ தலைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Principal with a Vision



An appreciation from Nallur Lions club I feel extremely delighted, in sen ding message of felici tation of the occasion of Diamond Jubilee Celebration of Lion V. Manickam who is completing the age of 60 years.

Mr. V. Manickam an eminent educationist, able administrator, a veteran member of Lions club a pious religious volunteer and a kind hearted social worker. His magnanimous and benevolent attitude made him to join the world reputed social service organization, the International association of Lions clubs.

He has been an ardent and active member of the Lions club of Nallur since its eruption. 1992 He also adorned the position of president of the Nallur Lions club during the year 2001-2002. During the tenure of his president ship of the club, very many service projects were conducted. He also used his intimacy with the Lions club in providing help and assistance to the needy students of the J/Cana garetnam M.M.V. particularly in donating spectacles.

His personal qualities such as ability, integrity, sociability etc, Combined with the leadership qualities such as human relation, under doing intelligence, motivation, sympathy, empathy, etc made him a successful leader in all the fields he has been serving of particularly in education, administration, religious and social service work. It is due to the possession by him the virtues and leadership traits, he is occupying the principal post for the last 20 years of these 16 years on the famous college J/Canagaretnam M.M.V. I join with the members of Nallur Lions club in wishing him a bright and happy future.

**K. Jayaratnam**
**Secretary,**
**Nallur, Lions Club.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டிய பெறுமதிக்கான வரிக்கணக்கீடு
# Accounting for Value Added Tax (VAT)

**01. அறிமுகம்**

அரசினால் நேரடியாக நுகர்வோர் மீது விதிக்கப்படும் வரியே ஏயவ ஆகும். இலங்கையில் ஏயவ 01-08-2002ம் ஆண்டு 14-ம் இலக்கச் சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த பண்டங்கள் சேவைகள் மீதான வரி (புளூவு) இரத்துச் செய்யப்பட்டது. ஏயுவு ஆனது பண்டங்கள் - சேவைகளின் பெறுமதியுடன் சேர்த்துக் கூட்டப்படும்.

விநியோகத்தவர்கள், இறக்குமதியாளர் ஆகிய இரு தரப்பினரும், நுகர்வோரிட மிருந்து அரசாங்கத்தின் சார்பாக Vat எனச் சேகரிக்கமுடியும். இவர்களை "Vat Agency" என அழைக்கப்படுவர். VAT தொடர்பான சகல கணக்குகளுக்கும் இவர்களே பொறுப்பாளியாவார். 2002-ம் ஆண்டு VAT-14ம் இலக்கச் சட்டத்தின் 2ம் அத்தியாயத்தில் வரி சேகரிக்கப்படும் முறைகள் பற்றித் தெளிவாக குறித்துரைக் கப்பட்டுள்ளது.

**நுகர்வோர்**

1. பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்
2. இறக்குமதியாளர் (ஏயுவு யுபநஉெல)

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

**1.1 வரி சேகரிப்பாளர் (VAT Agency)**

01. பதிவு செய்யப்பட் விநியோகத்தர்
02. இறக்குமதியாளர்

**1.2 பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்**

கீழ்வரும் சந்தர்ப்பங்களில் விநியோகத்தர் ஒருவர் தம்மை ஏயுவு சட்டத்தின்கீழ் பதிவு செய்து ஏயுவுஇன் பதிவு இலக்கத்தைப் பெறவேண்டும்.

12 மாதகால விற்பனை 2.5 மில்லியன் ரூபாவுக்கு மேற்படின், அல்லது,
03 மாதகால விற்பனை 650.000 ரூபாவுக்கு மேற்படின்

VAT வீதம் காலத்திற்கு காலம் மாற்றியமைக்கப்படும். 01-01-2009ல் VAT வீதம் கீழ்வரும் நான்கு வகையாக வகைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

01. நியம வீதம் - 12% (Standard Rate)
02. அத்தியாவசிய வீதம் - 5% (Essential Rate)
03. ஆடம்பர வீதம் - 20% (Sophisticated Rate)
04. பூச்சிய வீதம் - (Zoro Rate)

**1.2.1 நியம வீதம்** - 12%

உ+ம் : சவர்க்காரம் (Soap)
பற்பசை (Tooth paste)

**1.2.2 அத்தியாவசிய வீதம்** - 5%

உ+ம்:சீனிபருப்பு உருளைக்கிழங்கு உப்பு கருவாடு,செத்தல்மிளகாய் பால்மா வகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.2.3 ஆடம்பர வீதம் – 20%**

உ+ம் :தொலைக்காட்சி குளிர்சாதன பெட்டி மணிக்கூடு குளிரூட்டி வானொலி மோட்டார்கார்

**1.2.4 பூச்சிய வீதம்**

பூச்சிய வீத வரி தொடர்பாக ஏயுவு சட்டத்தின் 22.7ம் பந்தியில் கீழ்வருவோர் உள்ளடக்கப்படுவதாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

**வெளிநாட்டு ஏற்றுமதி**

பூச்சிய வரியின் கீழ் தம்மை பதிவு செய்து கொண்ட விநியோகத்தர்கள்.

**1.3 VAT செலுத்தும் முறை**

பண்டங்கள் விநியோகிக்கப்பட்டு 28 நாட்களுக்குள் பட்டியல் (Invoce) வாடிக்கையாளருக்கு வழங்கப்படல் வேண்டும். VAT ஆனது மாதாந்தம் அல்லது மூன்று மாதத்திற்கு ஒரு தடவை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும்.

VAT தொடர்பான சகல கணக்கீட்டு அறிக்கைகளும் மாதமுடிவில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு VAT Agencyயினால் அனுப்பப்படல் வேண்டும். அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மாதம் முடிவுற்று 20 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும்.

**வி.செந்தில்ராஜா**
**தலைவர்**
**கணக்கியல்துறை,**
**உயர்தொழில் நுட்பநிறுவனம்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன் விநாயகன் மாணிக்கம் அவர்களின் வாழ்வியற் பகுதிகள்

பெயர் : விநாயகன் - மாணிக்கம் (மாணிக்கராசா)

பிறப்பு : 1950-04-22

பிறந்த ஊர் : வேலணை

தந்தை : விநாயகன்

தாய் : அன்னப்பிள்ளை

ஆரம்பக்கல்வி : யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம்

இடைநிலைக்கல்வி : யா/ வேலணை மத்திய கல்லூரி.

உயர்நிலைக்கல்வி : யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பல்கலைக்கழகம் : கொழும்பு பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

கல்வித் தகைமைகள் : B.A. (Eco) கலைமாணி, B. Phil தத்துவமாணி Diploma in Ed. (பட்டப்பின் கல்வி டிப்ளோமா) (யாழ். பல்கலைக்கழகம்)

குடும்பம் : மனைவி

திருமதி சிறிரஞ்சிதமலர் மாணிக்கம்

(முன்னாள் பிரதேச சபைச் செயலர், மல்லாகம்)

மகன் : செந்தூரன் (அமரர்)

மகள் : சுகன்யா (திருமதி சுகன்யா ராஜ்பவன், மக்கள் வங்கி அலுவலர்)

மகன் : சைகிலேந்திரா (U.K)

கணனி மென்பொருள் பொறியியலாளர்

மகள் : லாவண்யா (அமரர்)

பேர்த்தி : ரட்சன்யா

சேவை விபரம் : அரசாங்க எழுதுவினைஞர் சேவை இலங்கை பொது எழுதுவினைஞர் சேவை

(1972 - 1982 வரை பத்து வருடங்கள்)

ஆட்பதிவுத் திணைக்களம் - கொழும்பு.

கச்சேரி - மட்டக்களப்பு.

உயர்நீதிமன்றம் - யாழ்ப்பாணம்.

ஆசிரியர் சேவை விபரம் :

நு/ பரிசுத்த திருத்துவக் கல்லூரி - நுவரெலியா.

கிளி/ இந்துமகாவித்தியாலயம் - கிளிநொச்சி

கிளி/ றோமன் கத்தோலிக்க பாடசாலை, புலோப்பளை.

யா/ மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

அதிபர் சேவை விபரம் :

யா/ காசிப்பிள்ளை வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

யா/ கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம்.

யா/ கனகரத்தினம் ம. மகா வித்தியாலயம்.

அரச சேவையில் 37 ஆண்டுகள்

தகைமைசார் பணிகள் :

வள ஆளணியினர் ஞ.நு.னூ. திட்டத்தின்கீழ் 1ஏபி, 1சி பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவ திறன் அபிவிருத்தி செயலமர்வு - 1997.

வள ஆளணியினர் இணைப்பாளராக மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம். அதிபர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி தரம் II- III சேர்ந்த அதிபர்களுக்கான முகாமைத்துவதிறன் அபிவிருத்தி - 1997 கலந்துகொண்டமை.

நல்லூர் கல்விக் கோட்டத்தில்

அதிபர் சங்கத் தலைவர்

பரீட்சைக்குழு செயலாளர்

பரீட்சைக்குழு இணைப்பாளர்

கொத்தணிப் பாடசாலைகளின் பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டமட்ட விளையாட்டப் போட்டிச் செயலாளர்

இடம்பெயர்ந்தவேளை....
சாவகச்சேரி கோட்டப் பாடசாகைலளில் இயங்கும் இணைக்கப்பட்ட வலய I பாடசாலைகளின் நிர்வாக அதிபராக 1995, 1996.

சைவபரிபாலன சபையில்
சபையில் நிரந்தர உறுப்பினராக
உள்ளக கணக்காய்வராக (தேர்வுச் செயலர் கந்தசாமி அவர்களின் காலத்தில்)
நிர்வாக சபை உறுப்பினர்

அரிமாக் கழகத்தில்
பொருளாளர்
தலைவர்
பணிப்பாளர் சபை அங்கத்தவர்

வண்ணை ஸ்ரீ மகா கணபதி கோவில் துவாதசிமட செயலாளர்
கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலய யோகர் சுவாமிகள் ஞாபகார்த்த நிதியத்தின் நிரந்தர உறுப்பினர் 1993லிருந்து இன்றுவரை.
யாழ். மாநகரசபை

நூலக புனரமைப்பு ஆலோசனைச் சபை குழு உறுப்பினர்
SOND நிறுவன ஆலோசனைக் குழு உறுப்பினர், கந்தர்மடம்.

வடமாகாண சபையின் ஞுவுநீளு நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவர்.

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை விளையாட்டுக்குழு பொருளாளர், செயலாளர்.
யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி செயற்றிட்டத்தின் வள ஆளணியினர்.
அதிபர்களுக்கான மூன்றாண்டுத் திட்டத்தின் வள ஆளணியினர்.

1991இற்கான சாதனை அதிபராகத் தெரிவு
1996 சாவகச்சேரி கோட்டப் பாடசாலைகளில் இயங்கிய வலயம் 1இன் பாடசாலைகளினுடைய நிர்வாக அதிபர்.

2003 வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முதலாவது மாகாண 1AB பாடசாலைக்குரிய A1C/A செயற்றிட்ட தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிநாள் கீதம் இசைத்திட வாழ்வீர் நீடு!

நல்லவை யாற்றி யன்பால்
நலம் தரக் கல்விப் புலத்தில்
பல்சுவை கனிய மானீர்
பற்றுடன் ஸ்ரான்லி தன்னில்
வெல்லவே முனைந்தீர் ரென்றும்
வென்றிடு நல்லூ ரதிபனென்று
சொல்லவே பெருமை கொண்டோம்
உயர்வொடு நிறைவில் நின்றீர்
இல்லமே மணிநாள் கீதம்
இசைத்திட வாழ்வீர் நீடு !

திரு. வே. ஞானகாந்தன்
அதிபர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
தலைவர் அதிபர்கள் சங்கம்
நல்லூர் கோட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/CANAGARATNAM MADHYA MAHA VIDYALAYAM

(Navothaya School) (Stanley College)

## DIAMOND JUBILEE CELEBRATION OF OUR PRINCIPAL

**Mr.Vinayagan Manickam** B.A(Eco),B.Phil., Dip.in.Ed.,
S.L.P.S-1, S.L.E.A.S -III
Assistant Director of Education Jaffna, Zone

### EXECUTIVE COMMITTEE

**President**
**Mr. S. Uthayakumar**
Deputy Principal,
President, Teachers' Guild.

**Secretary**
**Mrs. S. Harichandra**
Teacher,
Secretary, Teachers' Guild.

**Treasurer**
**Mr. S. Gnanasekaram**
Teacher
Treasurer, S.D.S.

**Editor**
**Mr.M.P.Arulananthan**
Teacher.

**Committee Members**

**Mr.V.Karunakaran**
Teacher.

**Mr.A. Jeyakumar**
Teacher
Treasurer, O.S.A, Jaffna.

**Mr. P.N. Shutharson**
Teacher,
Coordinator, O.S.A. Colombo.

**Mrs. T. Kaneswary**
Teacher.

**Mr. E. Kandasamy**
Secretary, S.D.S

**Mr. A.N. Selvarajah**
President, O.S.A. Jaffna.

**Mr. N.Perampalam**
Secretary, O.S.A, Jaffna.

**Mr. P. Yoganathan**
President, O.S.A, Colombo.

**Mr. S. Ambalavanar**
Secretary, O.S.A, Colombo.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கஜோதி மலர் குழுவினரின் மனம் நிறைந்த நன்றி

அகவை அறுபதை நிறைத்த

அன்பு அதிபர் மாணிக்கம் அவர்களின்

தகைமை குறித்த

"மாணிக்கஜோதி" படையலுக்கு

மனமுவந்து செய்திகள் தந்தவர்க்கும்

தேனினும் இனிய தேமதுரத் தமிழால்

வாழ்த்துக்கள் உரைத்தவர்க்கும்

காணிக்கைகளை விழா நாயகனுக்கு

கருணை செய்து உவந்தளித்தவர்க்கும்

மணிவிழாக் கண்டு மகிழ்ந்தவர்க்கும்

மாணிக்க மாண்புகள் பேசி கலந்தவர்க்கும்

அணிகலனாய் இம் மலரை அமைத்த

அன்ரா நிறுவனத்தாருக்கும்

எல்லாமாக இயங்கிய வித்தியாலய சமூகத்திற்கும்


எங்கள் மாணிக்கஜோதி மலர்க்குழுவினரின்

மனம் நிறைந்த நன்றிகள்

மாணிக்கஜோதி மலர்க்குழுவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அந்தநாள் ஞாபகம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்...

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பமும் சமூகமும்...




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியராக, வகுதித்தலைவராக, பிரதிஅதிபராக, அதிபராக கடமையாற்றிய பாடசாலைகளிலிருந்து...

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்பணிப்பாளர்களுடன்...



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நிகழ்வுகளில்...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org